# ஞானசம்பந்தம்


மலர் 11.] கரஹு தைமீ 10—2—52. [இதழ் 3.

## திருவாவடுதுறையில்

## இரு குருமகாசந்நிதானங்கள்



தருமை.



துறைசை.

ஆசிரியர் : காகலிங்கத் தம்பிரான்.

உ

சிவமயம்

திருககயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

## சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

### ஸ்ரீ திருநிலைநாயகி சமேத ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமிக்கும், திருஞானசம்பந்தப்பெருமானுக்கும், பரிவாரங்களுக்கும்

### ஜீர்ணோத்தாரண

# அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

17—3—52 திங்கட்கிழமை காலை மணி 9-10க்குமேல் 11-8க்குள் நடைபெறும். காணிக்கை செலுத்துபவர்கள் தேவஸ்தானம் ஷராப்பில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம். தேவஸ்தானம் உண்டியலிலும் செலுத்தலாம்.

14—3—52 வெள்ளிக்கிழமை முதல் 17—3—52 திங்கட்கிழமை முடிய நான்கு நாட்களிலும், சைவசித்தாந்த மகா நாடு நடைபெறும். பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அன்பர்கள வருக.

சீகாழி தேவஸ்தானம் ஆபீஸ்,
8—2—52.

வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான்,
கட்டளை விசாரணை.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] கரஞ தைமீ 10—2—52. [இதழ் 3

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## எல்லாம் தெய்வாதீனம்!

தெய்வாதீனம் என்றவுடன் சிவத்தொடர்புடையமக்களுக்கு 'அவனன்றி ஓர் அணுவும்அசையாதென்பதறிந்தனமே' 'ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தான்' என்ற அநுபூதிமான்களுடையவாக்கு நினைவிற்குவரும்; உண்மைதான்! எல்லாவற்றையும் திருவருள் விளையாட்டாக எண்ணுவது சமயவாதிகள் தகுதியே.

மனிதன் ஓயாமல் உழைக்கிறான்; ஊதியம் குறைவாகப் பெறுகிறான்; ஒருவன் ஒரு கணப்பொழுது ஆலோசனை கூறுகிறான்; தேட்டையான செல்வத்தை அடைகிறான். இதற்குக் காரணமென்ன? அறிவுள்ள மனிதன் எவனும் குறைந்த உழைப்பால் நிறைந்த லாபத்தைப் பெற விரும்பாமலிருக்கமாட்டான். அப்படியிருந்தும் பயன்கிட்டுவதில் ஏதோ ஏற்றத்தாழ்வுஉண்டாகின்றதென்றால், அதற்கு அடிப்படையான காரணம் ஆண்டவன் கருணையே. இதனையே தெய்வாதீனம் என்கிறோம். சுருங்கக் கூறின் மனிதனுடைய அறிவு, ஆராய்ச்சி, உழைப்பு இவற்றையெல்லாம் நிறுத்துப் பயனளிக்க வல்லது தெய்வாதீனம் என்பது தெளிவு.

10



சென்ற மாதம் 18—1—52ல் இரண்டு மகாசந்நிதானங்கள் ஒன்றுகூடினர்கள்; தருமையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடியார் பெருமக்களுக்கு அறிவுரை வழங்கினர்கள். அதிலே கீழ மடமும் மேல மடமுமாகிய இரண்டாதீனங்களும், சந்தித்தது 'வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல் கடல் வால் நுகத்தின் துளைவழி நேர்கழி கோத்தது' ஒக்குமென்று கூறியருளினர்கள். இதில் எவ்வளவு உயர்ந்த தத்துவம் இருக்கிறது; இப்படிச் சந்தித்த சந்திப்புதான் தெய்வாதீனமானது. தெய்வாதீனமான சந்திப்பில், எத்தனையோ நன்மைகள் நிகழ இருக்கின்றன. இரண்டு ஆதீனங்களுடைய இலட்சியங்களும், சுத்தாத்வைத சைவசித்தாந்தக் கொள்கைகளை நாட்டில் பரப்புவதே; அக்கொள்கைகளை அநுபவத்தில் அனைவரையும் கொண்டுவரச் செய்வதே. இவற்றுக்குரிய அடிப்படையான சாதனங்கள் திருநீறு, உருத்திராட்சம், பஞ்சாக்கரம் ஆகிய மூன்றுமே; அவற்றைப்பற்றி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கூறிய பொன்னுரைகள் மிகமிகப் போற்றத்தக்கன. அதிலும் பஞ்சாக்கர உபதேசம் பெற்றால்தான் ஞானசம்பந்தம் ஏற்படும் என்றது எவ்வளவு அருமையான ஆணித்தரமான பேச்சு! இரண்டு தெய்வாதீனங்களது தெய்வாதீனமான சேர்க்கையைப் பற்றி.

அவர்களுடைய அருளுரையில் பொதுமக்கள் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டிய மிகச் சிறந்த கருத்தொன்று உண்டு. மடாலயத்துக்கு வருகின்ற மக்கள் மடாலய வளர்ச்சிக்குரிய உயர்ந்த நோக்கத்தோடு வரவேண்டும். அருளையும் அறிவையுமே நாடி வருதல் வேண்டும். என்ற குறிப்புக்கள் அணியிலழுத்திய மணி போன்றவை. இதனை மிகமிகப் பாராட்டுகிறோம்.

இரு ஆதீனங்களுடைய சந்திப்பினல், இனிச் சுத்தாத்வைத சைவசாதன அபிமானமும் நாட்டில் நன்கு தழைத்தோங்குமாக! சொக்கலிங்கம் வைத்தியலிங்கம் எல்லாருள்ளத்தும் தோன்றாத் துணையாயிருந்து நல்லன செய்யுமாக.

---

# தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

## திருவாவடுதுறைக்கு விஜயம்.

திருவாவடுதுறை ஆதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணையின்வண்ணம் முன்னேற்பாடாகக் காவிரி தீர்த்தமண்டபத்திலிருந்து ஆதீன மடாலயம் வரையில் புதுமணல் பரப்பி மகா தோரணங்கள் கட்டி அழகு செய்யப்பெற்றிருந்தன. 'தருமையம்பதிவாழ் தவமணி வருக!' 'சிவனடி மறவாச் சிந்தையோய் வருக!' என்பனபோன்ற பல வரவேற்புத்தட்டிகள் ஆங்காங்கும் அழகுற விளங்கின. 18—1—52 மாலை 5-மணிக்கெல்லாம் இருஆதீனத்து அடியார் திருக்கூட்டங்களும், மாயூரம், குடந்தை முதலிய நகரப்பிரமுகர்களும், மற்றும் ஏனைய அன்பர்களும் தீர்த்தமண்டபத்தில் கூடி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்கத் தயாராக இருந்தார்கள். ஆறுமணியளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் அங்கு எழுந்தருளியானார்கள். மிகச்சிறந்த வரவேற்பு. யானை, குடை, கொடி, ஆலவட்டம் முதலிய விருதுகளுடனும் வாணவேடிக்கைகளுடனும் பட்டிணப்பிரவேசமாக அழைத்துச்சென்ற காட்சி பலரும் வியக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. திருக்கோயில் சுவாமி சந்நிதியை அடைந்தவுடன் இருபெருமகாசந்நிதானங்களும் சந்தித்து, ஒருவர்க்கொருவர் மலர்மாலை சூட்டி, பொன்னாடை போர்த்தி, திருவருட் பெருக்கில் திளைத்தார்கள். ஒவ்வொருசந்நிதியிலும் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. அங்கிருந்து மடாலயத்திற்கு எழுந்தருளியானதும் கொலுமண்டபத்தில் ஒருசேர அமர்ந்து திருவோலக்கக் காட்சியளித்தார்கள். ஆதீன அடியார் கூட்டத்தின் சார்பிலும் திருவிடைமருதூர் திருவாவடுதுறை ஆதீன உயர்நிலைப்பள்ளி சார்பிலும், ஆதீன வித்வான்கள் சார்பிலும் தருமபுர ஆதீன மகாசந்நிதானத்திற்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பெற்றன. மகாசந்நிதானம் அவர்களும் அவைகளை அன்போடு ஏற்றுக்கொண்டு பின்வருமாறு பேருரை யருளினார்கள்:—

பெருமக்களே! அன்பர்களே!!

இன்றையநாள் ஒரு சிறந்தநாள். திருவருள் வாய்ப்புக்குரியநாள். திருவருளைப் பருகியவர் - விழுங்கியவர் நம் மணிவாசகர். அவர் சொல்லுகின்றார் திருக்கோவையாரில். என்ன சொல்லுகிறார்? தெய்வத்தை மகிழ்தல் என்ற ஓர் துறை. கூடக்கூடிய பொருள்கள் இதுவரையில் கூடாதிருந்து இப்பொழுது கூடியிருக்குமாயின் அதற்குத் திருவருள்தானே காரணமாயிருக்கலாம். அப்படிக் கூட்டுவித்த திருவருளை - அருள் தெய்வத்தை வியப்பதும், பாராட்டுவதும், பாராட்டி மகிழ்வதுந்தானே மக்கள் இயற்கை. கோவை என்ன சொல்கிறது? மேற்கேயுள்ளது மேல்கடல்; கிழக்கேயுள்ளது கீழ்கடல். இரு கடலிலும் தனித்தனி ஒவ்வொரு பொருள் இருந்தது. பொருள் இரண்டும் ஒன்று சேரவேண்டியதுதான். கீழ்கடலும் மேல்கடலும் சேர்ந்தாலல்லவோ இரண்டிடத்தும் உள்ள பொருள் ஒன்று சேரமுடியும்? ஏதோ ஒரு காரணம் பற்றிக் கடலிலுள்ள பொருள்கள் இரண்டும் ஒன்று கூடின. ஒன்று நுகத்தடி; மற்றொன்று மூளை. இதை எண்ணுகின்றான் தலைவன். நாம் இருந்தது ஓரிடம்; தலைவியிருக்கின்றது மற்றோரிடம். இரண்டிடத்துப் பொருளையும் இங்கு ஓரிடத்தில் ஒன்று கூடியது ஏது? நமது நல்வினை. ஆகவே நாம் என்ன செய்யவேண்டும் என்று ஆராய்ந்தான்; நல்வினையின் விளைவாகிய தெய்வத்தையல்லது வேறு பிறதெய்வத்தை வியவேன்; அதுமட்டுமா? விரும்பவும்மாட்டேன் என்று உறுதி கூறுகின்றான்:

"வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வால்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன் கயிலைக்
கிளைவயின் நீக்கிஇக் கெண்டையங் கண்ணியைக் கொண்டு தந்த
விளைவையல்லால் வியவேன் நயவேன் தெய்வமிக்கனவே."

இதன் கருத்து என்ன? எந்த அருமையான காரியமாக இருந்தாலும் திருவருள் துணைசெய்யுமாயின் அது முடிவுறும் என்பது. அத்தகைய திருவருள்தான் இன்று இருசந்நிதானங்களையும் ஒருசேர ஓரிடத்தில் அமர்த்தியிருக்கிறது. ஆகவே நாமும் அத்திருவருளின் திறத்தைத் தானே வியக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அந்த முறையிலே மகிழ்கிறேன். உங்கட்கும் மகிழ்ச்சி.

அடுத்து ஆன்மாக்களைப் பார்ப்போம். ஆன்மாக்கள் அளவற்றன. அவைகள் பிறவிப்பிணியில் அகப்பட்டுக் காற்றாடிபோல் சுழன்றுகொண்டிருக்கின்றன. அவைகள் அந்தப்பிணியினின்றும் நீங்கவேண்டுமானால் அதற்கும் ஓர் மருந்துவேண்டும். அந்த மருந்துதான் பஞ்சாக்கரம். மெய்கண்டார் பஞ்சாக்கரத்தைப்பற்றிச் சிவஞானபோத ஒன்பதாம்சூத்திரத்துள் மிக அழகாகக் கூறுகின்றார். கண் இல்லாத குருடன் உலகைப் பார்த்துச் சொல்லுவான்; என்ன எங்கும் ஒரே இருட்டாக இருக்கின்றது; பொழுதுவிடிவதேயில்லையா என்று. அதுபோலத்தான் ஞானக்கண் இல்லாதவனும் இறைவனைக் காணமுடியாது. காணுதற்கு உபகாரமாக இருப்பதுதான் ஐந்தெழுத்து. இதன் பெருமையைச் சாத்திரங்களெல்லாம் மிக விளக்கமாகக் கூறுகின்றன. இத்தகைய பஞ்சாக்கரத்தை எண்ணுங்கள். இந்த ஆதீனஸ்தாபகரையும் எண்ணுங்கள். ஸ்தாபகர் திருநாமம் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர். பாருங்கள் பெயரின் அமைப்பை. பஞ்சாக்கர உபதேசம் பெற்றால் எங்கு சம்பந்தப்படலாம்? ஞானத்தோடு. ஆகவே ஞான சம்பந்தம் பெற ஸ்ரீ பஞ்சாக்கர உபதேசம் தேவை. ஞானசம்பந்தர் என்பது தருமையாதீன ஸ்தாபகரின் திருப்பெயர். இப்படி ஆதீனங்கள் ஒன்றினுக்கொன்று சம்பந்தமுற்றிருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய அடிப்படையோடு விளங்குவதுதான் நமது சைவ மடாலயங்கள்.

ஊழிக்காலத்தில் உலகமெலாம் அழியும். அப்போது கூட அழியாது விளங்கிக்கொண்டிருக்குமாம்; அதுமட்டு மல்ல; ஒவ்வொரு ஊழிதோறும் வளர்ந்துகொண்டிருக் குமாம் திருநொடித்தான்மலை என்று சுந்தரர் சொல்கிறார். அதுபோலத்தான் இறைவன் திருவருள் நிறைந்த குருமூர்த்திகளால் தாபிக்கப்பெற்ற திருமடா லயங்களும் எப்போதும் விளங்கிக்கொண்டேயிருக் கும். மடாலயத்திற்கு வருகின்ற மக்களும் உயர்ந்த நோக்கத்தோடு வரவேண்டும். மடாலய வளர்ச்சியில் அவர்கள்கருத்தும் செல்லவேண்டும்.

இவ்வாதீனகர்த்தர் தூய உள்ளத்தினர். அடுத்தது காட்டும் பளிங்குபோன்ற முகத்தினர். நேர்மையோடு கூடியவர்கள். மற்றொன்றையும் சிந்தியுங்கள். இவர் கட்கு முன் விளங்கியவர்கள் தனக்குப் பிற்றோன்ற லாக யாரையும் நியமிக்கவில்லை. பிற்றோன்றல் வேண்டாம் என்ற எண்ணமும் அவர்கட்குக் கிடையாது. அப்படி நியமிக்காவிட்டாலும் நியமிக்க வேண்டிய பொறுப்பு யாருக்குரியது? நமசிவாய மூர்த்திகளுக்கு உரியது. அவர்கள் இத்தலைவரைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். இதுதான் திருவருட் சம்மதம். ஸ்தாபகரின் திருவருள்வழியே இவர்களும் செல்கின்றார்கள். அவர்கள் நோக்கத்தை நிறைவேற்று கின்றார்கள். நீங்களும் இதனை நன்கு அறிவீர்கள். இத் தகைய நிகழ்ச்சி எங்கள் ஆதீனத்திலும் நிகழ்த்திருக் கிறது. 23வதுசந்நிதானமாக விளங்கியவர்கள் இவர்கள் பெயரையேகொண்டவர்கள். அவர்களைத்தோற்றுவித்த தும் குருஞானசம்பந்தர் திருவருள். அவர்கள் காலத்தில் தான் எங்கள் ஆதீனம் செம்மைப்பட்டது. ஆகவே இப்பொழுது அளித்த வரவேற்புக்கள் எல்லாம் அவர்களையே சாரும். திருவருள் எப்படிஎப்படியெல்லாம் இயக்குகின்றது என்பதைச்சிறிது எண்ணிப்பாருங்கள்.

மற்றொரு நிகழ்ச்சி வீதிவழியாக வரும்போது நினைவுக்கு வந்தது. அதையும் சொல்லிவிடுகிறேன்.

இந்த ஆதீனத்தை நினைக்கும்போது மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் நினைவும் வரத்தானே செய்யும். அந்தமுறையில் அவர்களைப்பற்றிய ஒரு எண்ணம் மனத்தில் தோன்றியது.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை நல்ல புலமைவாய்ந்தவர். சீகாழிக்கோவை ஒன்று அவர் பாடியிருக்கின்றார். அக்கோவைக்குச் சீகாழியில் முன்சீபாக இருந்த வேதநாயகம்பிள்ளை ஒரு சாற்றுக்கவியும் கொடுத்திருக்கிறார். காழிக்கோவைக்குக் காழிப்பெருமான் பிரமபுரீசுவரர் தானே பாட்டுடைத்தலைவராக இருக்கமுடியும். ஆகவே அப்பெருமானைப் பார்த்து வினவுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. என்ன கேட்கிறார் பாருங்கள். நீதிபதியின் கேள்வியல்லவா அது? காழியில் வீற்றிருக்கும் பெருமானே! நீர் இதுவரையில் எவ்வளவோ புகழ்ப்பாமாலைகள் பெற்றிருப்பீர்; பெற்றிருந்தாலும் இக்கோவையைப்போல - மீனாட்சி சுந்தரன் இயற்றிய பாமாலை போலப் பெற்றதுண்டா? உண்மையாகச் சொல்லும்; நாம் யார் தெரியுமா? இத்தலத்தின் நீதிபதி; ஒளிக்காமல் சொல்லும் என்கிறார். என்ன அருமையான கருத்து என்பதைப் பாருங்கள். இந்த நிகழ்ச்சிதான் வீதியில் வரும்போது தோன்றியது. ஒரு கேள்வியும் உதித்தது. சந்நிதானம் இதுவரையில் பல வரவேற்புகள் பெற்று இருக்கலாம்; ஆனாலும் இதுபோல மிகச் சிறந்தமுறையில் ஒரு வரவேற்புப் பெற்றதுண்டா? சொல்லும் என்பதுதான் அந்தக்கேள்வி. ஆகவே இந்தவரவேற்பு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. நீங்களும் மகிழ்ச்சியில் திளைக்கின்றீர்கள்.

பஞ்சாக்கர தேசிகரின் திருவருள் நிறையப்பெற்ற இந்த ஆதீனம் பல்லாண்டு பல்லாண்டாக வாழவேண்டும். உலகத்திற்கெல்லாம் ஞான ராஜதானியாக விளங்க வேண்டும். அருளொளி வீசவேண்டும். எங்கும் இன்பம் பெருகுக என்ற அளவில் ஏதோ சில வார்த்தைகள் சொன்னதாகக் கருதி அமைகிறேன்.

பின் ஆதீனஸ்தாபகர் ஸ்ரீமத். நமச்சிவாயமூர்த்திகள், திருமாளிகைத்தேவர் வழிபாடுகள்நடைபெற்றன. பலவூர்களிலிருந்தும்வந்திருந்த பெருமக்கள் அனைவரும் இரு சந்நிதானங்களையும் வணங்கி ஆசிபெற்று மகிழ்ந்தார்கள். அனைவர்க்கும் விருந்து நடைபெற்றது. இவைஎல்லாம் முடிந்தபிறகு சிலநேரம் இரண்டு மகாசந்நிதானங்களும் அளவளாவி மகிழ்ந்தார்கள். சுமார் 12-மணிக்குத் தருமபுரம் மகாசந்நிதானம் அவர்கள் தமது ஆதீனத்திற்கு எழுந்தருளினார்கள்.

தருமபுர ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் முதன் முறையாகத் திருவாவடுதுறைக்கு எழுந்தருளியது இப்பொழுதுதான். இது ஒரு தனிச்சிறப்பு. இச் சிறப்பினைக்காண வேண்டிதான் காவிரித்தாய்கூட நின்ற நிலையில் இருக்கிறாளோ? கண்டு மகிழ்கிறாளோ என்ற எண்ணத்தைத் தீர்த்த மண்டபத்தின் பக்கத்திலுள்ள காவிரியின் நீர்த்தேக்கம் உண்டாக்கியது. வரவேற்பின் ஒவ்வொரு அம்சத்திலும் திருவாவடுதுறை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் பேரன்பும் தாராள மனப்பான்மையும் ஒன்றுபட்டு நாட்டுநலம் பெறுவிக்கும் நன்மனப்பாங்கும் விளங்கியது. கண்டவர்கள் களிகூர்ந்தனர்; பார்த்தவர்கள் பரவசமாயினர்.

## வரவேற்புரைகள்.

**1. திருவாவடுதுறை ஆதீனம் ஒடுக்கம், ஸ்ரீமத். சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமிகள் வாசித்து அளித்தது:-**

**கமலை வருகுரு ஞானப்ரகாச விமல னருள்வழி வந்தமெய்க் குரவ!**

தருமையம் பதியும் விரிதமிழ்க் கூடலும் - புரிசைசேர் கமலைப் புனிதமா நகரும் - திருப்படை வீடெனக் கொண்டுறை சிவஞான தேசிக மூர்த்தியாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சந்நிதானம் அவர்கள், திருவாவடு துறை பிரியா துறைந்த - அருள்வெயிலெறிக்கும் பெருஞான பாநுவா - நலந்திகழ் சுத்த நமச்சிவாய மூர்த்தியின் - பொலந்திகழ் புண்ணியப்பதிக்கு எழுந்தருளிக் காட்சியளிக்கும் மாட்சியை என்னென்று புகழவல்லேம், மகாசந்நிதானத்தின் வரவு சைவவுலகுக்குப் பெரும்பயனையளிக்கும் எனத் திருவருளைப் பெரிதும் சிந்திக்கின்றோம். வாழ்க நீடூழி.

114

சைவப்பயிர் தழையத் தழைதரு சண்முக தேசிக மாமணிதந்த
சுப்பிரமணிய தேசிக முகிலே!

செந்தமிழகமுழுதும் சிவநெறி பேணக், கங்கணங்கட்டிக் காசியம் பதியுங்கண்டு, மாசிலாமணியென வையமுய்ய வழிகாட்டும் வள்ளலாகிய சந்நிதானமவர்கள் எளிவந்தருளும் இனியகாட்சிக்கு எளியரேம் சிந்தித்திருத்தலன்றி என் செய்ய வல்லேம். வாழ்க நின்னருள்.

குருஞான சம்பந்த தேசிக ராயன் தருஞான மொருவாத்
தருமையம் பதிவாழ் சுப்பிரமணிய திப்பிய குருவே!

திருநெறியதமிழைச் செந்தமிழுலகம் தெரிந்துய்யும் கருவிக ளின்றித் தடுமாறுவதை நன்குணர்ந்து, தெய்வத் தேசிக நிலையி னின்று உலகமக்களோடு வந்தொன்றி மானைக்காட்டி மானைப் பிடிப்பது போலச் செல்வத்திருவாளரும் கல்வித் திருவாளரும் கலந்துறைதர மகிழ்ந்துறைதரும் மாபெருங் குருமணியே! தங்கள் கருணைக்கோர் எல்லை காணேம். வாழ்க நின் மரபு.

குருவென வொருபெருங் கோலமுங்காட்டித், திருவளர் துறைசைத் திருப்பதி மருவி, விரிந்தபல் லுயிரையும் விழுங்கிடக் கருணை, மழைபொழி வள்ளலே! வாழ்க பல்லூழி வாழ்க பல்லூழி.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே."

—திருமந்திரம்

2. திருவாவடுதுறை ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கள் வாசித்து அளித்தது:—

குருஞானசம்பந்தர் குலம் விளக்கவந்த குருமணியே வருக!

முத்தி பஞ்சாட்சர தேசிகர் ஆதீன பாம்பரையில் துறவரசு வீற்றிருந்து சிவஞானச் செங்கோலாட்சி செலுத்தும் எங்கள் குரு மகாசந்நிதானம்அவர்களின் கருணைப்பெருக்கால், ஞானசம்பந்தம் நமசிவாயமாம் இருபெரு குருமகாசந்நிதானங்களின் ஒருமைசேர்

திருவோலக்கக்காட்சி இன்றுபோல் என்றும் அடியார்களாகிய எங்கட்குப்பெறும் பேறுநல்கி, சைவசமயத்தின் இருகண்களாக இரு ஆதீனங்களும் விளங்கவேண்டும்என்பதே எங்கள் வேணவா.

## சைவக்கண்ணெனும் சற்குருமணியே வருக! வருக!!

'சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்றெழுந்தருளப் பெற்றபேறிதனால் எற்றைக்குந் திருவருளுடையேம்' என்றமைபோல என்றும் இரு குருமகா சந்நிதானங்களும் சைவநன்மக்கட்கு நன்னெறிகாட்டி, நல்வழியுய்க்க வேண்டுகிறோம்.

## இன் தமிழ் திருமுறை எழிலுறப் போற்றும்
## தருமை நற்குருவே வருக! வருக!!

கடவுட் பற்று குறைவுற்றுவரும் இன்றைய நிலையில் ஆங்காங்கு நேரில் சென்று காட்சி யளித்து, அடியார்கட்கும் சைவ நன்மக்கட்கும் கடவுள் உணர்வினைப் பெருக்குதலோடு, துறவரசு வீற்றிருந்து நல்லுபதேசம் செய்யும் தருமையம்பதியிலும், தமிழ்க் கல்லூரி, தேவார இன்னிசைக் கல்லூரி, ஆகம பாடசாலை ஆகிய இன்றியமையாக் கல்வி நிலையங்களை நிறுவி அக்கல்வி நிலையங்கள் மூலமாக மக்களுக்கு ஊனசம்பந்தம் அகற்றி ஞானசம்பந்தம் அளிக்கும் நற்கருணைத் திறத்தினை என்னென்போம்.

## சித்தாந்த சைவச் செந்நெறிபுரக்கும் செம்மலே வருக!

சிவம்பேணி, சைவம் காத்துச் சித்தாந்த சைவச்செந்நெறியை உலகுய்ய, உயிர்களுய்ய, பெருங்கருணையோடு உலகிடைப்பரப்பும் சற்குருவே வருக! வருக!! குருமகாசந்நிதானம் அவர்களின் துறைசையம்பதி வருகை நல்வருகையாகுக!

## காலம் அறிந்த கவின் குருமணியே வருக!

தற்காலத்திற்கு நாட்டிற்குத்தேவையாம் நல்லறங்கள் பலவற்றுள்ளும், கல்விச்சாலை, வாசகசாலை முதலியன அமைத்து அவ்வப்போது ஆங்காங்கும் நேரில் சென்று அவ்வவ்வறங்களைச் செவ்வனே பரிபாலிக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவருட்செங்கோல் நீடுநிலவ எல்லாம்வல்ல ஈசன் நல்லருளை நாடுகின்றோம்.

---

## தலைமை உரை

திருவையாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத். மாணிக்க வாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 29—1—52ல் கோவைஜில்லா சிவகிரியில் நிகழ்ந்த ஸ்ரீ அப்பூதியடிகளுயனர் குரு பூசையின் எட்டாவது ஆண்டு விழாவில் நிகழ்த்தியது.

ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாயடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நம்குருநா தன்.

செந்தமிழ் எங்கும் செறிவுறப் பொங்கும் புகழ்மிகு கொங்குவளநாட்டுப் பெரியோர்களே! தாய்மார்களே! உங்கள் சைவசமயப்பற்று முற்றிய நிலையினைக்கண்டு மிகமிக மகிழ்கின்றேன். எங்கள் திருக்கயிலாய பரம் பரைத் தருமபுர ஆதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களிடத்துப் பெருமதிப்பும் பக்தியும் கொண்டுள்ள பெற்றியினாற்றான், இவ்வடியேனை இவ் வவைக்குத் தலைமை தாங்குமாறு வரித்துள்ளீர்கள். ஆதலின், எங்கள் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவருளாசியால் உங்களனைவருக்கும் பெருவளனெல் லாம் மிகப் பெருகுவதாகுக.

கொங்குநாட்டில் உள்ள சிவாலயங்களை நினைக்குந் தோறும் உள்ளங் கரைகின்றது; உரை குழறுகின்றது. பஞ்சாக்கரப்பதிகம் பெற்ற தலமாகிய பாண்டிக் கொடு முடியும் இந் நாட்டகத்ததன்றோ! இந்நாட்டில் பவகிரி போக்கும் சிவகிரிதான் சிரகிரியாய்த் திகழ்கின்றது. இச் சிவகிரிவாழ் திருமுருகன் செங்கோட்டில் வாழுபவ னாய் விளங்குகின்றான். "செங்கோடனைக் கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே" எனவும், "செஞ்சேவல் கொண்டு வரவேணும், செங்கோடமர்ந்த பெருமாளே" எனவும் வருவன அருணகிரியின் அருள்வாக்கு. செஞ் சேவல் கொண்டு செங்கோடமரும் திருமுருகனுருவமும் இச்சிவகிரியிலுறையும் முருகன் உருவமும் ஒன்றாகவே மிளிர்கின்றது. இச்சிவபரம்பொருளைச் சேவிக்கும் பேறுபெற்ற சீலர்களே? இங்கு நிகழும் விழா அப்பூதி யடிகணாயனாரின் குருபூசைவிழாவாகும். இவ்விழா எட்டாவதாண்டினது. இவ் எட்டினைப் பற்றிஉங்கட்கு ஒரு குறிப்புத்தர ஆசைப்படுகின்றேன்.

இவ்வெண்ணனது சைவசமயப் பண்பினர்க்கு மிக மிக இன்றியமையாததாகும். தனியடியார் அறுபான் மும்மையினரில் முதலாவதாக வைத்தெண்ணப்படுவார் யார்? அவர்தான் திருநீலகண்டர். அவர் திருநீலகண்ட மாகிய திருநாமமந்திரமாம் எட்டெழுத்தினைக்கொண்டே உய்ந்தவராவர். ஆகலின், அவர் திருநீலகண்டர் எனவே திருப்பெயர் எய்தப்பெற்றார். திருநீலகண்டம் எட்டு எழுத்துப் பெருமந்திரமாம். இதனைப் போன்று எட் டெழுத்துமறை திருநாவுக்கரசு என்னும் திருநாமமே யாகும். *இவ்வெட்டெழுத்து மந்திரத்தின் உண்மை உணர்ந்துய்ந்தவர், திங்கள் பூசித்தபடியால் திங்களூர் எனப் பெயர் வழங்கப்பெற்ற பதியில் அவதரித்தருளிய

---

*'ஞானசம்பந்தம்', 'நாவுக்கரசு' என்ற திருநாமங்களை யாப்பிலக்கணம் கூறுவதுபோல ஒற்றுநீக்கி ஐந்தெழுத்தாக எண்ணி ஐந்தெழுத்து மந்திர மாகக் கொள்வதும் உண்டு.

அப்பூதியடிகளாவர். இறைவன் அட்டமூர்த்தமாக உள்ளான். அட்டவீரட்டானத்துறையம்மானுமாவன். எண்தோள் வீசியாடும் எழிலனுமாவன். இப்பரமன் அருள்செய்மாடலும் எட்டெட்டாகும். இப்பரமன்செய் லீலைகள்பற்றி "அட்டாட்ட விக்கிரலீலை" எனும் நூலும் நுவலாநிற்கும். அட்டலக்குமி, அட்டதிக்குப்பாலகர், அட்டவசுக்கள், அட்டதிசை, அட்டமலை, அட்டசித்தி முதலியன கொண்டமைதல் அமைதியாகும். மருணீக்கியா ராகிய தருமசேனருக்குச் சூலைநோய் தந்து தடுத்தாண் டருளிய திருவதிகை வீரட்டானத்துறை தேவதேவன் அருளிய திருப்பெயர் யாது? திருநாவுக்கரசு என்னும் எட்டெழுத்து மந்திரமன்றோ? இவ்வப்பர் பெருமானுக்கு நாமம் சூட்டியதுபோலக் காளத்தியப்பரும் வேடுவர் குலச் செம்மலாகிய திண்ணனுருக்கும் கண்ணப்பர் எனப் பெயரிட்டு விளித்தனர்.

இறைவன் இங்ஙனமாக எட்டுருக்கொண்டுள்ளான். ஆகலின் அவனுடைய பல திருநாமாக்கரங்களில் இஃதும் ஒன்றெனக் கொள்ளலாமன்றோ! திருநாவுக்கரசெனும் நாமம் எட்டெழுத்தாலாகியுளது. வைணவரும் எட் டெழுத்தினையே மிகமிகப் போற்றுகின்றனர். திங்களூர் ஒருநம்பியப்பூதியடிகளும் பத்திசெய் பரவசராய், சித்தி செய் சீலராய், அடியார்பூசை யரன்பூசை எனக்கொண்ட ஆண்டகையாய் விளங்கியவராவர். அப்பூதியடிகளார் எட்டெழுத்து மறையாகிய ஆளுடையவரசின் திருநாம மந்திரத்தினைச் செப்பிச் சிவசாயுச்சியத்தினையெய்தினர். இவ்வடிகளார் தவிர, ஏனை மறையவர் குலத்தினர் ஒருவரும் இன்றுவரை அப்பர் பெருமான் திருப் பெயரினைச் சூட்டிக்கொண்டுள்ளனராவென்பது எனக்குத் தோன்றவில்லை.

இத்திருநாவுக்கரசு சுவாமிகளை நூலுரை போதக ஆசிரியராய் விளங்கிய ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள்,

122

“ இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்துவாழ்வாம்.”

என்றுரைத்தருளுகிறார்கள்.

அப்பர்பெருமானின் திருவடிகளை ஐசுவரியமாகக் கொண்டதால், இப்பெயர் உற்றார்கொலோ! அ பூதி எனப்பிரித்து அகரம் எம்மொழிக்கும் முதலெழுத்து; எல்லா எழுத்துக்களையும் இயக்கும் இறைமையை உடையது. “அகரவுயிர்போல் அறிவாகியெங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து” என்பது ஞானநூல். திருக்குறளும் “அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு” என அறைகின்றது. அ என்பது எட்டெனும் தமிழ் எண்ணையும் உணர்த்தும். எட்டெழுத்துத் திருநாம மந்திரம் பெயர்பூண்ட திருநாவுக்கரசினைப்பூதியாகக் (செல்வமாகக்) கொண்டபடியால், இந்தப்பெயர் எய்தினரோ? என எண்ணுகின்றேன். விபூதி, பூதி என்பன ஐசுவரியத்தினைக் குறிக்கும் என்பது வடநூல் வழக்கு.

அப்பர் அடிகளைப்பற்றி ஒப்பில்பதம் பெற்றார் ஒருநம்பியப்பூதி என்பதனை உலகம் அறியும். அப்பூதியடிகளைப் பற்றினால், நாம் ஏன் நன்னெறியில் சென்று வாழமுடியாது. முக்காலும் எக்காலும் வாழமுடியும்.

“ஒருநம்பி யப்பூதி” என்று தொகை நூலாகிய திருத்தொண்டத்தொகை கூறும்

“தனமாவது திருநாவுக் கரசின் சரணமென்றா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயற்றிங்கள் ஊரினில் வேதியன் அப்பூதியே”

என்று வகைநூலாகிய திருத்தொண்டத்தொகையும்,

"தாண்டவம் புரியவல்ல தம்பிரா னாருக் கன்பர்
ஈண்டிய புகழின்பாலார் எல்லையில் தவத்தின்மிக்கார்
ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியாமுன்னே
காண்டகு காதல் கூரக் கலந்த அன்பினராய் உள்ளார்"

என்று விரிநூலாகிய திருத்தொண்டர் புராணமும் கூறும்.

இப்பெற்றி மூற்றிய ஒருநம்பி யப்பூதியின் குரு பூசையின் விழாவினைப் பெரும் பூசையாகக் கொண்டு மிளிர்கின்ற உங்கட்கு, எங்கள் குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருட்பெருக்கம் உண்டாவதாகுக.

இனி, உலகில் மக்கள் பலதிறப்படுவார்கள். அவர்களுள் தெய்வமென்பதோர் சித்தமுண்டாகிய சீலர்களே சீலர்களாகுவர். அவர்களே முத்திநெறிக்கு முனைபவராகுவர். ஏனையார் முனைவரோ! முனையார். முனைவதற்கும் உள்ளமிடந்தராது. தெய்வ சிந்தனை ஒருவருக்கு உண்டாகுமேயானல் அவர்கள் பல்லூழிகாலம் பரமனை அர்ச்சித்திருத்தல் வேண்டும். இன்றேல் வரமாட்டாது.

உலகில் நெறிகள் மூன்றுள. அவை வேதநெறி, சைவநெறி, பத்திநெறி என்பனவாம். பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் பின்வருமாறு பேசுகின்றது:-

"தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து விருத்தர் இருதாளைச்சேர்ந்த, மைந்தர்தாள்வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாதுவாய்மெய், சிந்தைதான் அரனடிக்கே செலுத்தினாய்ச் சிவானுபூதிச் செல்வராகிப், பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர் தாள்பரவிப் பணிதல் செய்வாம்"

"பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்திபண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன் மார்க்கர்
கண்டநூலோதி வீடு காதலிப்பவர்கட்கீசன்
புண்டரிகத்தாள் சேரும் பரிசினைப் புகலலுற்றாம்".

என்பது சிவஞானசித்தியார் வாக்கு.

பத்தர்கள் செல்லும் நெறிதான் பத்திநெறியாகும்.

மார்க்கர் கண்ட நெறி தவநெறி, சன்மார்க்கநெறி என்பனவாம்.

தவநெறி தாச, சத்புத்ர, சகமார்க்கம் என மூவகைப்படும். சன்மார்க்கநெறிதான் ஞானநெறியாகும்.

" நார்பயில் தேயந் தன்னுள் நான்மறை பயிலாநாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தாலுகும்
தரையினிற் கீழைவிட்டுத் தவஞ்செய் சாதினியில்வந்து
பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணுைதே".

என்பதும் இதனை வலியுறுத்துவதாகும்.

திருக்களிற்றுப்படியாரும்:-

" நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய – வல்லதுதான்
ஆரேனு மன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன் ",

எனப்பகரும். அப்பரடிகள்,

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே "
" என்கடன் பணிசெய்து கிடப்பதே "

எனவும்,

" காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

எனவும், யோகத்தினை,

" உயிராவணமிருந்துற்றுநோக்கி யுள்ளக் கிழியினுருவெழுதி
உயிராவணஞ் செய்திட் டுன்கைத் தந்தால் உணரப்படுவாரோ
டொட்டிவாழ்தி
அயிராவணமேறா தானேறேறி யமரர்நாடாளாதே யாரூரா
ண்ட
அயிராவணமே யென்னம்மானே நின் அருட்கண்ணால் நோக்
காதார் அல்லாதாரே"

எனவும், ஞானத்தினை,

"ஊனினுள் ளுயிரைவாட்டி யுணர்வினார்க் கெளியராகி
வானினுள் வானவர்க்கும் அறியலாகாத வஞ்சர்
நானெனிற் றானேயென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின்னமுது மானார் திருச்செம்பொன் பள்ளியாரே."

எனவும் அருளுருவர்.

பக்தர்கள் குருபக்தி, இலிங்கபக்தி, சங்கமபக்தி செய்தவராவர். சித்தர்கள் பலதிறப்படுவர். ஞான சம்பந்தரும் 'பத்தரொடு சித்தர்பயில்கின்ற பழுவூரே' எனப்பாடியுள்ளாராகலின், சித்தர்கூட்டம் என்று ஒன்றுண்டு எனத் தெரிகிறது. பதினெண்சித்தரோ, நவகோடி சித்தரோ, சிவகதிசேரும் சித்தரோ யாரோ.

சித்தர்காடு, நவகோடிசித்தபுரம், சித்தீச்சுரம், முதலிய ஊர்ப் பெயர்களையும் பார்த்தல் வேண்டும். கருவூர்ச் சித்தர், திருமூலர், திருமாளித்தேவர், யோகர் முதலானோரும் சித்தர் எனப்பகரப்பெறுவர். சித்தர் சிவப்பிரகாச சுவாமிகள்என்ற ஒருபெரியாரும் உளர் அன்றோ?

இனிப் பித்தரும் சித்தரும் எனுந் தலைப்புப்பற்றிப் பேசப்பெறும் பெரும்பொருளைக்கேட்டு மகிழ்வோமாக.

மற்றும் உங்களுக்கெல்லாம் எங்கள் குருமகாசந்நி தானம் அவர்கள் அருட்பெருக்குக் கிடைக்கும்வண்ணம் தென்றமிழ்ச் சொக்கர் இன்றமிழடியை இறைஞ்சு கின்றேன்.

---

# தில்லையில் நடராஜப் பெருமானுக்கு லட்சர்ர்ச்சனை.

மக்கள் அனைவருக்கும் நன்மை பெருகவேண்டும்; அறவழியில் மக்கள்வாழ்வுமுன்னேறிச்செல்லவேண்டும்; எங்கும் அன்பு ஓங்கவேண்டும்; எங்கும்இன்பம்பெருக வேண்டும் என்ற பெருங்கருணையுடன் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்கு லட்சார்ச்சனை செய்வித்தார்கள்.

16—1—52ல் தொடங்கப்பெற்ற இந்த அர்ச்சனை நாள்தோறும் 20000 வீதம் நடந்து, 22—1—52வ்அன்று நிறைவேறியது. அன்று மாலையே வசோர்த்தாரை ஹோமம் என்னும் ஒரு பெரிய ஹோமம் நடராஜப் பெருமான் சந்நிதியில் தொடங்கச்செய்து, இரவுநடராஜப் பெருமானுக்கு மகாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

லட்சார்ச்சனைநிறைவுக்கு ஸ்ரீலஸ்ரீ மாகசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினர்கள். பொதுதீட்சிதர்கள் ஆலய வாயிலிலேயே வரவேற்று உபசரித்து அழைத்துச் சென்றார்கள். நகரப் பிரமுகர்களாகிய திரு. வி. கல்யாணம் பிள்ளை, திரு மார்க்கண்டம் பிள்ளை ஆகியோரும் அதில் கலந்து கொண்டார்கள். இத்தகைய சிறந்த - பெரியஹோமம் இதுவரை நடைபெற்றதில்லை. என்னலாம். அற்புதமான அலங்காரங்களுடன் காட்சி யளித்த ஸ்ரீ நடராஜப் பெருமானை ஆயிரக்கணக்கான அன்பர்கள் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சிதம்பரத்திற்கு எழுந்தருளியபோது திருக்கடம்பூர், திருஓமாம்புலியூர், திருநாரையூர், திருவேட்களம் திருநெல்வாயில், திருக் கழிப்பாலை, திருநெல்வாயில், அரத்துறை, திருமுது

குன்றம், திருத்துங்கானைமாடம், மாறன்பாடி ஆகிய தலங்களுக்கும் சென்று வழிபாடாற்றினர்கள்.

சைவ சந்தானசாரிய முதல்வராகிய மெய்கண்டார் அவதரித்த களப்பாளர்மேடு என்ற இடத்திற்கும் சென்று வழிபட்டு அன்று இரவே தருமைக்கு எழுந்தருளினர்கள்.

திருக்காளத்தி எழுந்தருளி வழிபாடு முடித்துத் திரும்ப வந்துகொண்டிருந்த திருவாவடுதுறை மகா சந்நிதானம் அவர்களும், சிதம்பர தரிசனத்திற்காகச் சென்றுகொண்டிருந்த தருமபுர ஆதீனமகாசந்நிதானம் அவர்களும் வழியில் சந்திக்க நேர்ந்தது. சந்தித்த உடனே இரு மகா சந்நிதானங்களும் சிறிது நேரம் யாத்திரா வைபவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து பிறகு அவரவர்கள் செல்லவேண்டிய இடங்களுக்கு எழுந்தருளினர்கள்.

---


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(கரஹூ மாசிமீ 1உ முதல் 30உ வரையில்)

1. மேஷம். அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதியோடு கூடின மேஷராசிக்காரர்களுக்குப் பூர்ணசுப பலனைத்தரும். கீர்த்திபத்திரம், தனலாபம், தொழில்விருத்தி, தாரபுத்திரசுகம், சந்தோஷ சமாசாரக் கேள்வி, சத்துருநாசம், நஷ்டதனபிராப்தி, விவசாயத்தில் மத்திமபலன், காரியவெற்றி, குலாசார பழக்கவழக்கங்கள், சுபசோபனதிகள், மிருஷ்டான்ன போஜனம். பரணி, கார்த்திகை நக்ஷத்திரக்காரர்கள் மேஷராசி சம்பந்தத்தால் முதற்பகுதியில் சமபலனையும், பிற்பாதியில் மேற்கண்ட சுபபலன்களையும் அடைவார்கள். மாதக்கடைசி வாரத்தில் மேஷராசி சம்பந்தப்பட்டவர்கள் எல்லாவிதத்திலும் மனக்கிலேசத்தை அடையநேரும். மாசியில் 5, 6 தேதிகளும், புதன்கிழமையும் சுகமாய் இராது.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

தனவிரயம், பிரபுகோபம், குடும்பகலகம், தாரபுத்திர பீடை, வைத்தியச்செலவு, அபவாதக்கேள்வி, தொழில்மந்தம், வீண்மனஸ்தாபம் முதலிய திருப்திகரமில்லாத பலன்கள். மாதத்தின் நடுப்பகுதி பத்துத்தினங்களிலும் முந்தியும் பிந்தியும் சந்தோஷ சமாசாரக் கேள்வியும், தூரயாத்திரையிலிருந்து ஆப்தர்கள் திரும்புதலும், பந்துமித்திரசேர்க்கையும், புத்திரனல் சந்தோஷகரமான வார்த்தை கேள்வியும், கிரஹசுகமும், பெரியோர்நேசமும், சந்நியாஸபழக்கமும், தர்மகாரியபிரவிருத்தியும், க்ஷேத்திராடனங்களும், சுபமும் உண்டாகும். ஞாயிறு, வியாழன் சுபவாரங்கள். அதில் சகலகாரியங்களும் சித்தியைத் தரும்.

3. **மிதுனம்.** மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

வியாபாரவிருத்தி, தனதான்யச்சேர்க்கை, கூட்டுத்தொழில் ஆரம்பம், நித்தியம் மிருஷ்டான்னபோஜன சுகம், ஸத்கர்மலாபம், பெரியோர்நேசம், அலைச்சல்மூலமான தனபிராப்தி, தொழிலாளிக்கு கொம்மாளம், நடுத்தரவகுப்பாருக்கு அதிகச்செலவு, பிரபுக்களுக்குப் பொக்கிஷம்நிறைதல், ரத்தினுபரணச்சேர்க்கை, சுபசோபனதிகள் இவை நடைபெறும். திருவாதிரை, புனர்பூசம் சம்பந்தப்பட்ட மிதுன ராசிக்காரர்கள் மிகுந்த துக்கப்படுவார்கள். தனதான்ய நாசம், நம்பினவன் மோசம்செய்தல், தூரத்திலிருந்து அப்பிரியவார்த்தை கேள்வி, சதா குரோதபுத்தி, பெரியோர் சாபமிடுதல், துர்புத்தி, நாஸ்தீகம் முதலிய அசுப பலன்கள் நடைபெறும்.

4. **கடகம்.** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

மேற்படி ராசிக்காரர்களுக்கு கீர்த்தி பத்திரம் கிடைத்தல், சத்துருதோல்வியடைதல், கஷ்டம் விலகுதல், தொழில் விருத்தி ஆகுதல், மேலோர் பெரியோரால் நன்மையடைதல், சோதரரால் சுகமடைதல், அடிக்கடி லாபகரத்தோடு சஞ்சாரம் ஏற்படுதல், ஸ்திரீமூலமாய் சந்தோஷமடைதல், உலகில் பிரக்யாதி ஏற்படுதல், நூதனராஜஸபாபிரவேசம்செய்தல் முதலிய சந்தோஷங்கள் ஏற்படும். ஆனுல், நடுப்பகுதி பத்துத்தினங்களிலும், கடைசி ஐந்துதினங்களிலும் சோரபீடை, விஷஜந்து தரிசனம், தான்ய நஷ்டம் முதலியவைகளும் ஏற்பட்டு விலகும். புனர்பூச நக்ஷத்திரக்காரர்களுக்குமாத்திரம் எந்தவித நன்மையும் சந்தோஷமும் அளிக்காது. 18, 27 தேதியும், சனிக்கிழமை, புதன்கிழமைகளும் சுகமாய் இராது.

5. **சிம்மம்.** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகநக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட சிம்மராசிக்காரர்களுக்கு தேக ஆரோக்கிய குறைவும், ஔஷத சேவையும், அலைச்சலும், களத்திரவர்க்கக் குறையும், காரியங்கள் தாமதப்படுதலும்

உற்சாகம் இல்லாமலும், தைன்யஸ்வபாவமும், தொழில் குறைபாடும், வேலையாள் குறையும், கலகமும், பந்தப்படுதலும், கஷ்டநஷ்டங்களும் ஏற்படும். மேற்படிமீ 17உக்குமேல் பிற்பாதி முடிய, மகம் தவிர இதர இரண்டு நக்ஷத்திரங்களுக்கும் சுபசோபனாதிகளும், ஜயமும், கீர்த்தி பத்திரமும், சந்தோஷசமாசாரங்களும், இல்லற சுகமும், விரயத்தோடு மனநிம்மதியும் ஏற்படும். திங்கள், புதன் சுபம்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

ஷை கன்னியா ராசிக்கும் உத்திரம் சித்திரை நக்ஷத்திரகாரர்களுக்கும் பூரண சுபமில்லை. வீண் அலைச்சல், சொத்து நஷ்டம், வாஹனக்குறை, மார்க்க மத்தியில் அசௌகரியங்கள், இடம் மாறல் முதலியவைகளும் ஷைமாதம் 10உ முதல் மற்ற இருபகுதிகளிலும் எதிர்பாராத லாபகாரம், பிரமோஷனோடு உத்தியோகமாற்றம், கூட்டுத்தொழில் விருத்தி, தொழில் விருத்தி, வியாபாரம் நூதனமாய் ஆரம்பித்தல், புத்தி கோசரம், வாக்சாதுர்யம், சிருங்காரரஸ பிரவிருத்தி, இல்லற சுகம், சுபசமாசாரக் கேள்வி முதலியவைகள் ஏற்படும். செவ்வாய் சனி வாரங்கள் சுபமாய் இராது.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சுவாதியோடு சேர்ந்த துலாராசிக்காரர்களுக்குப் பூரண சுபமாஸம். எங்கும் கியாதியும், கிரயவிக்கிரயங்களில் லாபகரமும், நினைத்ததெல்லாம் கைகூடுதலும், எதிர்பாராத நஷ்டதனபிராப்தியும், கீர்த்தி பத்திரங்களும், வெகுஜனங்களால் கொண்டாடும் தன்மையும், நூதன பிரபு ஜனங்கள் பழக்கமும், பெரியோர் நேசமும், தபோபலம் விருத்தியும், தெய்வசக்தி பிரகாசித்தலும், சுபங்கள் சுக்லசந்திரனைப்போல் விருத்தியடையும். மற்ற சித்திரை பின் இரண்டு பாதக்காரர்களும் விசாக நக்ஷத்திரக்காரர்களும் பெருத்த ஆபத்துக்குள்ளாவார்கள்; தைர்யமுள்ளவர்கள் ஆபத்துக்களை ஜயிப்பார்கள்; சிரமம் ஜாஸ்தியாகும்; மனக்கவலை அதிகமாகும். வியாழனும் செவ்வாயும் நலமிராது.

131

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

இந்த ராசிக்காரர்களில் விசாக நக்ஷத்திரம் அதிக துன்பத்தை அளிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை குறைவு, வீண்செலவுகள், துர்ஸகவாசம், தொழில்நஷ்டம், மித்திரனே விரோதியாகுதல், வீணான அலேச்சல், கோர்ட்டில் சாக்ஷி சொல்லுதல், அபவாதம் அடைதல், நாஸ்திகம் மேலிடல், துவேஷபுத்தியடைதல் முதலியவைகள் ஏற்படும். ஆனால், உத்தியோகத்தில் மாத்திரம் பிரமோஷனும் செல்வாக்கும் எதேச்சாதிகாரமும் ஏற்படும். மாதக் கடைசி வாரத்தில் வாகன சுகம். நூதன வஸ்திராபரணச் சேர்க்கை. தன்னுடைய குணத்தைஒத்த தனிகர்களின் சிநேகமும் ஏற்படும். புதனும் சனியும் நலமிராது.

9. தனுர். மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூல நக்ஷத்திரம் சேர்ந்த தனுர்ராசி கோசாரபலன் சுபத்தைத்தராது. பூராடத்துக்கும் உத்திராடம் முதல்பாதத்துக்கும் ஷேமாதம் சுபமாகும். மேன்மை, சத்ருஜபம், தனபிராப்தி, ஆரோக்கியம், இல்லற சுகம், பிரபு சன்மானம், காரியவெற்றி, தொழில் மேன்மை, வியாபார லாபம். விவசாயத்தில் எதிர் பார்த்ததைவிட விசேஷ லாபகரம், கன்றுகாலி சேர்க்கை, வாகனயோகம், பந்துமித்ரஸமாகமம். இவைகள்மாதம்முழுவதும் சுபமாக நடைபெறும். மூலநக்ஷத்திரம் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தனதான்யநாசம், எங்கும் அபஜயம், அபவாதகேள்வி, வேலேயாள் குறை, கன்றுகாலி நஷ்டம், சரீர பீடை, வைத்திய செலவுகள் ஏற்படும். வியாழனும், புதனும் சுபவார்மாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

உத்திராடம், அவிட்டம், சம்பந்தப்பட்ட மகராசிக்காரர்களுக்கு நடுப்பகுதிதான் சுபபலனேத்தரும். முன்பின் 20-தினங்களில் ஆரோக்கிய குறைவு, தன நஷ்டம், வீண் அலேச்சல், வைத்தியசெலவு, மனக்கவலே இதுகள் அதிகமாகும். திருடர் பகைவர்பயமும் உண்டாகிவிலகும். திருவோணம் மகராசிக்கு

மாதம் முழுவதும் சுபமேயாகும். வித்யார்த்திகளுக்கு வித்யா விருத்தி; தொழிலாளிகளுக்குத் தொழில்மூலம் விசேஷலாபம். வியாபாரிகளுக்கு வியாபார விருத்தியும், நஷ்டதனபிராப்தியும் ஏற்படும். வெள்ளி, சனிக்கிழமைகளில் நலன்காட்டும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

ஷை நக்ஷத்திரங்கள் 3க்கும் இம்மாதம் சுபமிராது. கஷ்ட நஷ்டங்கள், அதிக உழைப்பு, பிரயாசைக்குத்தக்க லாபமின்மை, வீண்மனஸ்தாபம், சோரபீடை, சத்ருபயம், தூரயாத்திரை, காரியவிக்கினம், மனக்கிலேசம், நீசாசாரம், நாஸ்திகபுத்தி, துஸ்ஸகவாசம், வித்யாபங்கம், அபகீர்த்தி, தொழில் நஷ்டம் முதலிய சிரமபலன்கள் விசேஷமாகக் காணப்படும். ஏதோ ஒன்றிரண்டு சுபகாரியங்கள் மத்தியில் ஏற்படும். வியாழன், சனி, ஞாயிறு கெட்டபலன்களைத் தரும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

ஷை ராசியில் உத்திரட்டாதி, ரேவதி சம்பந்தப்பட்டவர்களுக்கு இம்மாதம் பூர்ண சுபமாகும். தனதான்ய விருத்தி, வியாபார லாபம், தொழில்மேன்மை, சுபசோபனதிகள், வாக்கு சாதுரியத்தால் காரியவெற்றி, வித்தியாவிருத்தி, மனோல்லாசம், உல்லாச யாத்திரை, கீர்த்திபத்திரம், ராஜசபாபிரவேசம், சகல காரியானுகூலம், பெரியோர்நேசம், சத்காலக்ஷேபங்கள் இவைகள் ஏற்படும். செவ்வாய், புதன், வியாழன் சுபவாரமாகும்.

### தருமை, துறைசையாதீன

# ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் ஆலய வழிபாடு.

8—2—52 தை மாதக் கடைவெள்ளி. திருக்கடவூரில் ஸ்ரீ அபிராமி யம்மை வழிபாடு மிகச் சிறந்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அன்பர்கள் கூட்டம் அதிகமாகவே யிருக்கும். அதுவும் தைமாத வெள்ளிக் கிழமை மிகச் சிறந்தது. அந்தமுறையில் அன்பர்கள் கூட்டம் அன்றும் அதிகம். அம்மையும் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத செவ்வியளாகக் காட்சியளித்தாள். திருவாபரணங்கள் எவ்வளவுஉண்டோ அவ்வளவும் சாத்தப் பெற்றன; திருமுன்பு பூப்பந்தலலங்காரம் ஒரு தனியழகு. இத்துடன் தருமபுர ஆதீனப் பாடசாலை இசையாசிரியர் சங்கீதபூஷணம் திரு .P. சாமிநாதன் & பார்ட்டியாரின் இன்னிசைக் கச்சேரியும் மாலை 5 மணி முதல் தொடங்கி நடைபெற்றது.

அம்மையாரைத் தரிசிக்க அருட் குருமூர்த்திகளும் எழுந்தருளினார்கள். திருக்கடவூர் எல்லை அம்மனாற்றங் கரையில் அருளிப்பாடு பார்க்கப்பெற்றது. திருக்கோபுர வாயிலின் அருகே எழுந்தருளியவுடன் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு மிக உயர்ந்த முறையில் தயாரித்த அழகிய மாலையை அணிந்து வரவேற்றார்கள். முறையாக வழிபாடு தொடங்கி நடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசருக்கும், ஸ்ரீ காலசம்ஹார மூர்த்திக்கும் பஞ்சமுகார்ச்சனை; அம்மையாருக்கு நவ சத்தி அருச்சனை எல்லாம் சிறப்பாக நடைபெற்றன. ஆராதனை முடிவில் சம்பிரதாயப்படி திருக்கோயில் மரியாதைகளும் மகாசந்நிதானங்களுக்கு நன்றாக நடத்துவிக்கப் பெற்றன. அன்பர்கள் அனைவரும் இறைவழிபாடும் குருவழிபாடும் செய்து அருட்பிரசாத மும் குருப்பிரசாதமும் பெற்றார்கள். பிறகு திருக்கை

134



வழக்கம். இவை யெல்லாம் முடிந்தபிறகு இருமகா சந்நிதானங்களும் தருமைக்கு எழுந்தருளி, திருவமுது செய்தருளினார்கள். துறைசையாதீன மகாசந்நிதானம் அவர்கள் பிறகு தமது ஆதீனத்திற்கு எழுந்தருளினார்கள்.

9—2—52 ஸ்திரவாரம்; திருநள்ளாற்றில் ஆலய வழிபாடு. திருவாவடுதுறை மகாசந்நிதானமவர்கள் மாலை 4½ மணிக்கெல்லாம் தருமபுர ஆதீன மடாலயத்திற்கு எழுந்தருளியானார்கள். இரு மகாசந்நிதானங்களும் ஒருவருக்கொருவர் அளவளாவி மகிழ்ந்தார்கள். 6 மணிக்கெல்லாம் இரு சந்நிதானங்களும் ஒருசேரத்தருமபுரத்திலிருந்து புறப்பட்டுத் திருநள்ளாற்றிற்கு எழுந்தருளியானார்கள். கோயில் திருவாயிலில் ஆலய சம்பிரதாயப்படி வரவேற்பு; வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. கோயில் கமிட்டி மெம்பர்களின் 'சார்பில் பொதுக் கூட்டம் கூட்டப்பெற்றது. வரவேற்புரை வாசித்தளிக்கப்பெற்றது. பிறகு கட்டளை மடத்திற்கு எழுந்தருளிக் கொலுவீற்றிருந்தார்கள். அன்பர்கள் கொலுக் காட்சி தரிசனம் செய்து ஆசிபெற்று மகிழ்ந்தார்கள்.

பிறகு இரு மகாசந்நிதானங்களும் தருமைக்கு எழுந்தருளினார்கள் இரவு திருவமுது கொண்டருளிய பிறகு அன்று தைப்பூசமாதலின் திருவிடைமருதூருக்கு மகாசந்நிதானங்கள் எழுந்தருளியாகி, காவிரிதீர்த்தமண்டபத்தில் மண்டபதீபாராதனை தரிசனம் செய்தருளினார்கள். அங்கிருந்து பெருமான் வெள்ளி இரதத்தில் வீதியுலாவாக எழுந்தருளினார். மகா சந்நிதானங்களும் கீழவீதி வரையிலும் உடனிருந்து சிறப்பித்தார்கள். அன்பர்களுக்கு ஆனந்தமான தரிசனம் கிடைத்தது. பிறகு இருவரும் தத்தம் ஆதீனத்திற்கு எழுந்தருளியானார்கள்.

தேவி தாட்சா யணிகலையுங் காட்டை யாதி திகழுருவில்
தேவி பரிணா மங்கொடுப்பாய் திகழும் விசுவ நாசசத்தி
தேவி மூலப் பிரகிருதி திகழுஞ் சருவே சுவரிசிவை
தேவி யெழின்மங் கலப்பிரதை திகழ்சர் வார்த்த
சா திகையே.

கு - ரை: தாட்சாயணி-தட்சப்பிரசாபதியின் மகள், நிமிடம் பதின்மூன்றுகொண்டது காட்டை, காட்டைமுப்பது கொண்டது கலை, உருவில் - காலத்தின் உருவங்களால், பரிணாமம்-மாறுபாடு; அவஸ்தை, விசுவநாசசத்தி - உலகத்தின் அழிவுக்குக்காரணமான சக்தி; சங்காரசக்தி. மூலப்பிரகிருதி-படைப்புக்குக்காரணமான சக்தி, சருவேசுவரி - எல்லாவிதமான சுதந்தரமுமுடையவள், சிவை - மங்கலத்தைச் செய்பவள், சிவசக்தியாயிருப்பவள் மங்கலப்பிரதை - மங்களத்தைக் கொடுப்பவள், சர்வார்த்த சாதிகை - எல்லாவிதமான காரியசித்திகளையுமுண்டாக்குபவள்.

வி - ரை: கலையும் காட்டையும் முகூர்த்தமுதலிய காலங்களின் உறுப்புக்களாம். சிலர் காலமும் திக்கும் வியவகார கற்பனையாலேற்பட்டனவேயன்றி அவை பொருளல்லவென்பர். இப்போது கடமிருக்கின்றது. இப்போது இந்தப்புருடனுண்டாகிருனென்றற்றொடக்கத்து வியவகாரங்களால் காலமும் இந்திரியத்திற்கு விஷயமா மென்பர் என்பது வேதாந்த பரிபாஷை. ஆதலின் கலை காட்டையாதி திகழுருவில் என்றார். பிராணிகளிடத்துள்ள மூப்புஇளமைகள் காலத்தினலுண்டாகின்றனவென்பது தர்க்கபரிபாஷை, தேவிகாலவுருவங்களால் சீவர்களுக்குப் பாலியம், கௌமாரம், யௌவனம், விருத்தத்துவம் என்கிற அவஸ்தைகளைக் கொடுப்பவளாதலின் "காட்டையாதி திகழுருவின் தேவி பரிணாமங்கொடுப்பாய்" எனத்துதிக்கப்பெற்றதென்க. கலை முதலிய காலவுருவங்களெல்லாம் தேவியின் சொரூபமாம் என்பதை "கலாகாஷ்டாதி காலரூபிணி" என்னும் தேவியுபநிடதத்தானுமுணர்க. மூலப்பிரகிருதியே உலகப்படைப்பிற்குக் காரணமான சக்தி. இம்மூலப்பிரகிருதி பரமசிவத்தினுடைய, உலகத்தைப்படைக்கும் பொருட்டுக்கொண்ட அனந்த சக்திகளுள் ஒன்று என்பர் சைவநூலோர். இப்பிரகிருதிசக்தி

136

சத்துவம் ரசசு தமசு என்னும் முக்குணங்களேயுமுடையது. உலக மெல்லாம் இதனினின்றும் உற்பத்தியாயினமையின் இதற்கு மூலப்பிரகிருதியென்ற பெயர் உண்டாயிற்று. இந்த மூலப் பிரகிருதியானது பலவகையான மாறுபாடுகளேயடைந்து இவ் வுலகமாகப் பரிணமித்திருக்கின்றது. சேதன பதார்த்தங்க ளெல்லாம் ஈஸ்வராமிசமெனவும் சடபதார்த்தங்களெல்லாம் பிரகிருதியின் அமிசமாமெனவும் கூறுவர். உருவில் என்பது வேற்றுமைமயக்கம். 4

தேவி கௌரி சரணியையே திகழும்பரையே முக்கண்ணி
தேவி நாரா யணிமகத்தாய்த் திகழு மாயா ரூபிணியே
தேவி யளித்தல் பாலித்த றிகழு மழித்தல் புரிபவளே
தேவி சகலே சைப்புகழ்சேர் திகழ்ச நாத நீவரையே.

கு - ரை: கௌரி - கௌரவர்ணமுடையவள். சரணியை - அடைக்கலம்புகுதற்குத் தகுந்தவள். பரை - பரா என்ற சப்த ரூபமாக விருப்பவள். நாராயணி - பாலனசக்தி; சுத்தசத்துவப் பிரதானமுடைய விஷ்ணுசக்தி. மகத்து - பெரியது. அளித்தல்- படைத்தல், சகலேசை - எல்லா விதமான சாமார்த்தியமு முடைய வள். சநாதநீ - எப்போதும் அழிவில்லாமல் இருப்பவளே; நித்தியமானவளே என்பதாம். வரை - வரம்கொடுப்பவள்.

வி - ரை: சிருட்டி முதலிய முத்தொழிலேச்செய்தல் பரா சக்தியின் பகுதியனவாகவே கூறப்பட்ட வாமாதிசத்திகளின் காரியங்களாதலின் 'தேவியளித்தல் பாலித்தல் திகழுமழித்தல் புரிபவளே' என்றார் என்க. 5

தேவி குணவா சிரயமுடைத் தேவி யகுண மயமுடைய
தேவி நாரா யணிநமவே திகழும் பத்தி சீலத்தாற்
றேவி னினது சரணடைந்தார்க் கருளுங் கருணைத்
திருவுருவி
தேவி சகலார்த்திகளழித்துத் திகழுஞ்சர்வ பூதையம்மே.

கு - ரை: குணம் - மகதாதி குணங்களுக்கு, ஆசிரயம் உடை - இருப்பிடமாயுள்ள, அகுணம்மயம் - குணமின்மையாகிய

வடிவம். நாராயணி - நாராயணனுக்குச் சகோதரியாயிருப்பவள். சீலம் - நல்லொழுக்கம்; வழிபாடு, சகல ஆர்த்திகள் - எல்லாவிதமான துன்பங்களையும், சருவபூதை - ஐம்பெரும் பூதங்களாயிருப்பவள். (விசுவரூபமாயிருப்பவள்)

வி - ரை: தேவி குணங்களையுடைய வடிவமும் குணமின்மையை யுடைய வடிவமும் ஆகிய இரண்டுவித வடிவங்களுடையவள். அறியப்படாத குணத்தாற் செய்த விகாரம் உடையவளே அகுணமயமுடைய தேவியாம். இவள் மகதாதி குணங்களாற் செய்யப்படும் விகாரத்தை யடையாதவள். பிறப்பு முதலியவைகளால் இழிந்தவரும் கள்வர் முதலியவர்களால் பீடிக்கப்பட்டவர்களுமாகித் தனது திருவடிகளில் அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றி யருள்புரியுங் கருணைத்திருவுருவம் உடையளாகலின் தேவி 'சரணடைந்தார்க் கருளுங் கருணைத் திருவுருவி' எனத் துதிக்கப்பெற்றாள். கிரகபீடை முதலியவற்றால்வரும் பலவகைத்துன்பங்களையும் நீக்கி யருள்செய்பவள் தேவியாகலின் 'சர்வஸ்யார்த்திஹரே' என்று வடநூலிலும் சொல்லப்படுகின்றாள். 6

தேவி கமலா லயைநாரா யணியே திகழு மாமாயை
தேவியஞ்சமுறுமெழில்சேர் திகழ்விமானத்தமர்பரையே
தேவி யெழிலார் கமண்டலவா ரியினு னனைப்பாய்
திகழ்வரதை
தேவி நாரா யணிமகத்தாய்த் திகழு மாயை பிரமாணி.

கு - ரை: கமல ஆலயை - தாமரை மலர்க் கோயிலில் வீற்றிருப்பவள். "அருணும் புயத்துமென் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும் தருணம் புயமுலைத் தையல்" "ஆடகத்தாமரை யாரணங்கு" அபிராமியந்தாதி. அஞ்சம் உறும் - அன்னங்கள் பூட்டப்பெற்றுள்ள, விமானம்; "அன்னத் தேர்பூட்டி" என்பர். கமண்டல வாரி - கமண்டலம் என்னும் பாத்திரத்திலுள்ள நீர். மகத்து - மேன்மை; மகதத்துவம்.

வி - ரை: "கமலாலயம் என்னும் திருவாரூரில் எழுந்தருளி இருப்பவளாதலின் தேவிக்குக் கமலா என்று பெயர். கமலா

என்னும் தேவியின் க்ஷேத்திரம் கமலாலயம்" தேவீபாகவத வசனம். நாராயணன் என்னும் பதத்திற்குச் சிவன் என்னும் பொருள் உண்மையின் நாராயணி என்பதற்குச் சிவனுடன் அபின்னமாயிருக்கும் சிவசக்தி என்பது பொருளாம் என்பர். வரதை என்பதற்கு வரத கரம் உடையவள், வரம் கொடுப்பவள் எனப் பொருள்கொள்க. பின்னர்வந்துள்ள நாராயணி என்னும் பதத்திற்குச் சீவர்களின் கூட்டத்திற்கு ஆதாரபூதமாயிருப்பவள் என்பது பொருளாம். நாரஸ்ய - சீவ கூட்டத்திற்கு. அயனி - ஆதாரமாயிருப்பவள். 7

தேவி திரிசூ லம்மதிபாம் பணிந்த பரையே சேவேறி
தேவி யெழிலார் வடிவுடைமா கேசு வரியே திகழ்மாயா
தேவி சத்தியையேந்தி சிகண்டி யிறகுக் கொடியனகை
தேவி கௌமா ரியின்வடிவ தானமுள்ளாய்செயசெயவே.

கு - ரை: பரை - சிவசக்தி. சே ஏறி - இடபத்தில் ஏறியிருப்பவளே. மாகேசுவரி - மகேஸ்வர சக்தி. சத்தியை ஏந்தி - வேலைத் தரித்திருப்பவளே. சிகண்டி இறகு கொடி அனகை - மயில் இறகினைக் கொடியாகக் கொண்டிருக்கின்ற குற்ற மற்றவளே. கௌமாரி - குமாரசக்தி. வடிவம் தானம் - உருவத்தையும் இடத்தையும். உள்ளாய் - கொண்டுள்ளவளே; குமாரசக்தி என்பது பொருளாம். செயசெய - போற்றி.

வி - ரை: மயில்தோகைகளைக் கொடியாகக் கொண்டுள்ளவளே எனத் தேவி துதிக்கப்படுதலை பீஷ்மபர்வத்தில் உள்ள துர்க்காஸ்தோத்திரத்தில் காண்க. 8

தேவி சங்க மரிசார்ங்கந் திகழுங் கதையு மேந்தியுறும்
தேவி வைண வீவிநதை சிறுவன் வெந்நிற் சேர்பவளே
தேவி கோர மாநேமி சேர்த்தாய் பூமி யேந்துதந்தத்
தேவி பன்றியுருவினளே சிவையேநினதுசரண்போற்றி.

கு - ரை: அரி - வாள். சார்ங்கம் - வில். கதை - தண்டு. வைணவீ - விஷ்ணுசக்தியே, விநதை சிறுவன் வெந்நிற் சேர்பவளே - கருடனுடைய முதுகில் அமர்ந்திருப்பவளே. "மேலாய

உவணவூர்தி யூர்வாளே” தக்கயாகப்பரணி செய்யுள் 110. மாநேமி சேர்த்தாய்-பெரிய சக்கரப்படையைத் தரித்திருப்பவளே. தந்தம்-கொம்பு. சிவை-நன்மையை உடையவள்.

வி-ரை: இரணியாட்சன் என்பவன் கடலினுள் மறைத்து வைத்த பூமியைத் தாங்கிவந்த கொம்புகளையுடைய வராக மூர்த்தியின் சக்தியாயிருப்பவள் ஆதலின் தேவி “பூமியேந்து தந்தத் தேவி” என்றும் அவள், வராகமுகம் உடைய தேவியாதலின் “பன்றியுருவினளே” என்றும் துதிக்கப்பெற்றாள். 9

தேவி யுலக முழுதும்மச் செய்யு மிக்க விதத்தாளே
தேவி கொடிய வசுரருயிர் செகுப்பக் கோர நரவுருவின்
மேவு சிங்க வடிவமுளாய் விண்ணோர் பழிச்சு
மொண்ணிதியே
தேவி யெமையா ணாரணியே திகழ்நின் கமல சரண்
போற்றி.

கு-ரை: மிக்க விதத்தாள்-மேன்மையான செயலை யுடையவள். செகுப்ப-கொல்ல. பழிச்சும்-புகழ்கின்ற. ஒள்நிதி-சிறந்த செல்வமாயுள்ளவள்; சங்கநிதி பதுமநிதிகள்: நாரணி-எங்கும் வியாபகம் உடையவள். 10

தேவி யெழிலா ரைந்திரியே திகழ்வச் சிரமேந் தியதேவி
தேவி யெனையாள் கிரிடினியே திகழுநயன மாயிரத்தாய்
தேவி விருத்தி ரனைச்செற்றாய் திதியின் சுதர்தம்
வலியழித்த
தேவி கோர ரூபிமகா ராவை சிவதூ தீநம்வே.

கு-ரை: ஐந்திரி-இந்திரசக்தி. வச்சிரம்-வாள். கிரிடினி-கிரீடம் தரித்துள்ளவள். நயனம்-கண்கள். ஆயிரத்தாய்-ஆயிரமாக உடையவளே. “தசசத நயனி” அத். 8. செய். 11. விருத்திரனை-விருத்திரன் என்னும் அசுரனை. செற்றாய்-அழித்தவளே. திதியின்சுதர்-அசுரர். கோரரூபி-பயங்கரமான உருவம் உடையவள். மகாராவை-மகாராவர்; பெருஞ்சப்தம் உடையவள்; தேவி தனது பயங்கரசப்தத்தினாலும் பகைவரை அழிப்பாள். ‘மதுபதித்தொனி............வென்றனள்’ அத். 8. செய். 6. சிவதூதி-அம்பிகையின் திருநாமங்களில் ஒன்று; சும்ப

நிசும்பர்களிடம் சிவனைத் தூதாக அனுப்பினவள். "அம்மை யேவலாலே சிவதூதி யாயமர்ந்தாள்."

வி-ரை: இந்திரன் விருத்திரனைத் தனது இந்திரசக்தியின் மூலமாகவே வென்றான் ஆதலின் 'தேவிவிருத்திரனைச்செற்றாய்' என்றார். தேவேந்திரன் தேவியை மந்திரங்களாலும் தோத்திரங்களாலும் வழிபட்டு அப்பரதேவதையின் துணைகொண்டே விருத்திரனைக்கொன்றான் ஆதலின் தேவிக்கு 'விருத்திரநிகந்திரீ' யென்று பெயர் உண்டாயிற்று. தேவீபாகவதம் காண்க. 11

தேவி கோர தந்தத்தாற் பயஞ்செய் வதனி சிரமாலை
மேவு மணியா யணிந்தாளே மிக்க வலிசேர் சண்ட முண்ட
ராவி யுண்ட சாமுண்டி யடியேந் துக்க மழித்தவளே
தேவி யுலகம் பாலிப்பாய் திகழ்நா ரணிநின் சரண் போற்றி.

கு-ரை: கோரதந்தம் - உக்கிரமாகிய சிங்கப்பல், வதனி - முகமுடையவள். சிரமாலை - மனிதர்களின் சிரமாலையை 'குலவு முண்ட விழுக்கின் மாலையுங் கொண்டு' 7. அத் 3. செய், சாமுண்டி - சண்டமுண்டர்களைக் கொன்றவள். 'இன்னோர்க் கடந்தமையானீ பூவிற் சாமுண்டியாவாய் காளி' 7 அத் 13செய். நாராயணி - தேசு முதலியவற்றால் நாராயணனை ஒத்திருப்பவள்.

அழியா வீர முடையாளே யகில மங்க லங்களுடை
யெழிலாரும்மங் கலத்தன்மை யுருவி நியதையுடனீசை
மொழியால் வேதமூனைக்கெள ணம் முக்கியம்மாயுரைப் பதனாற்
பழியி னினது துதிப்பரம வாக்கும் பரையே நீயன்றோ.

கு-ரை; அகில........உருவி - சர்வ மங்களங்களுடைய அழகு நிறைந்த மங்களத்தன்மையை உருவமாக உடையவளே. நியதை - அதிர்ஷ்ட உருவம் உடையவளே. ஈசை - எல்லாவற்றையும் செய்யும் வலிமை உடையவளே. மொழியால் - சப்தத்தின் மூலம். (சப்தம் - சொல்.) முக்கியம் - நேரே பொருளுணர்த்தும்

சொல், கௌணம் - பொருளின் குணம்முதலிய சம்பந்தங்களால் பொருளுணர்த்தும்சொல், துதிபாமவாக்கு-தோத்திரங்களாகிய மேலான வாக்குகள். பரையே - பரா என்னும் சொல்வடிவாக விளங்குகின்றவளே.

வி - ரை: வேதமானது தனது சப்தமாகிய சொற்களின் மூலமாக உன்னைக்கௌணபதமாகவும் முக்கியபதமாகவும் சொல்வதனுல் குற்றமில்லாத உன்னுடைய தோத்திரங்களாகிய மேலானவாக்குகளும் நீயேதான் என்பது பின்னிரண்டடிகளின் பொருளாம். தேவியின் தோத்திரங்களினுள்ள எல்லாப்பதங்களும் தேவியின் சொரூபமேயாதலின் தேவிக்கு நாங்கள் செய்யும் தோத்திரம் வேறொன்றுமில்லை யென்பது கருத்தாம். தருக்கநூலார் மொழிகளை முக்கியம் கௌணம் என இரண்டாகப் பிரிப்பர். முக்கியத்தைப் பரமென்றும், கௌணத்தை அபரமென்றும் கூறுவர்.

முக்கியமல்லாதது கௌணமாம். கௌணம் இரண்டாம் பட்சம். சிங்கம் கர்ச்சிக்கின்றது என்பதில் சிங்கமென்னும்சொல் நேரே சிங்கமென்னும் மிருகத்தை யுணர்த்துகின்றது ஆதலால் சிங்கமென்பது முக்கியபதமாம். சிங்கக்குட்டி இச்சிறுவன் என்பதில் சிங்கக்குட்டிஎன்னும் சொல்சிங்கக்குட்டியாகிய மிருகத்தை யுணர்த்தாமல் சிங்கக்குட்டியின் வீரமுதலிய குண சம்பந்தத்தை யுடைய சிறுவனையுணர்த்தி நிற்றலால் சிங்கக்குட்டி யென்பது கௌணபதமாம். 13

தேவி செய்யா ணாண்சுவதை திகழ்மா வித்தை
துருவையொடு,
தேவி சிரத்தை மாராத்ரி திகழும் புட்டி சரசுவதி
தேவி மேதை மாவவித்தை பூதி ரசனி தாமசியே
தேவி யெங்கும் பாணிபதஞ் சிரங்கண் முகமூக் கொடு
காதும்.

கு - ரை: செய்யாள் - இலக்குமி நாண் - வெட்கம் சுவதை - சுவதாதேவியின் சொரூபமானவள், மாவித்தை - உபநிடதங்களின் சொரூபமாயிருப்பவள், துருவை - ஸ்திரபா

யிருப்பவள்; மாறுதலடையாதவள், சிரத்தை - ஆத்திகபுத்தி; வேள்விமுதலிய நற்காரியங்களில் விருப்பம், மாராத்திரி - பிரமப் பிரளய சொரூபமாயிருப்பவள், புட்டி - புஷ்டி, செழுமை பலம் ஆகியவற்றின் உருவமாயிருப்பவள், சரசுவதி - வாக்குத்தேவதை, மேதை - மேலான புத்தியுருவினளாயிருப்பவள். மா அவித்தை- பெரிய அஞ்ஞான சொரூபமுடையவள், பூதி-சத்துவகுணத்தைப் பிரதானமாகவுடையவள், ரசசி-ராசதகுணமுடையவள், தாமசி- தாமதகுணத்தோடு கூடியவள் எங்கும் பாணி பதம் சிரங்கள் - எல்லாத்திசைகளிலும் கைகள், பாதங்கள், தலைகள்; முகமூக் கொடு காதும் என்பது தேவிநீயே பொருந்திநிற்பாய் என அடுத்த செய்யுளில் முடிவுபெறுகின்றது

வி - ரை: 'வித்யாஹம வித்யாஹம்' என்றபடி தேவியே வித்தையாகவும் அவித்தையாகவும் விளங்குகின்றாள். அவள் தனது வித்தியாவுருவத்தினால் தன்னைக்குறித்து உபாசனை முதலியசெய்யும் பக்தர்களைச் சனனமரண ரூபமான சமுசாரத்தி னின்றும் விடுவிக்கின்றாள். தன்னைக்குறித்துக் காமிகமான உபாசனையுங்கூடச் செய்யாது திரியும் மூடர்களைப் பிறப்பிறப்புக் களில் கட்டுண்டிருக்கச்செய்கிறாள் எனக்கூறப்படுதலின் தேவி 'மாவித்தை' யென்றும், 'மாவவித்தை' யென்றும் துதிக்கப்படு கின்றாள். 14

தேவி நீயே பொருந்திநிற்பாய் திகழுஞ் சர்வரூபமுளாய்
தேவி சருவ சத்தியொடுந் திகழு வாய்துர்க் காதேவி
தேவி மூக்க ணுறுநினது சிறந்த சாந்த முகம்பயங்க
ளோவ நீக்கி யெமைப்புரக்க வுனது பாதம்போற்றின
மால்.

கு - ரை: சருவரூபம் - எல்லாப் பொருள்வடிவமும், உளாய் - கொண்டுள்ளவளே, சருவசத்தி - சடமும் சேதனமு மாகிய எல்லாப்பொருள்களிலுமுள்ள சக்தி. துர்க்காதேவி - துர்க்கமன் என்னும் அசுரனைக் கொன்றவளே. 'துர்க்கமன் னெனுமசுரனை யழித்தலாற் றுர்க்கை' 11 அத் 31 செய். ஓவநீக்கி - ஒழியச்செய்து. புரக்க - காப்பாற்றும்படி.

இடத்தொடு என வாளா ஓதினமையின் மூன்று இடமும் கொள்ளப்பட்டது. (உஎ)

அவற்றுள்,
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி. (228)

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: முன்னிலை தன்மை என்று சொல்லப்பட்ட அவ்விரண்டிடத்தொடு நிலைபெறாதாகும், ஏவற் பொருண்மையை உணர்த்துஞ்சொல் என்றவாறு.

உ - ம். அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க என வரும்.

தன்மை முன்னிலை என்னாது முன்னிலை தன்மை என்றதனாற் சிறுபான்மை முன்னிலைத் தன்மைக் கண்ணும் வருமெனக்கொள்க.

உ - ம். "கடாவுக பாக நின் கால்வல் நெடுந்தேர்" யான் செல்க காட்டிற்கு என வரும்.

மற்று. இவ்வியங்கோள் ஏவல்கண்ணியதும் ஏவல் கண்ணாததும் என இருவகைத்து. ஏவல்கண்ணியதாவது உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல். ஏவல் கண்ணாததாவது இழிந்தான் உயர்ந்தானை இன்னது செய்யப்பெற வேண்டிக்கோடல். மற்றது பெரும்பான்மையும் 'உணர்க' என்றாற்போலக் ககரங் கிடைத்து வருமே எனினும், வாழியர் என அர் ஈறும், வாழிய என யகரவீறும், "இயற்கைப்பொருளை யிற்றெனக் கிளத்தல்" என அல்லீறும், "மறைக்குங் காலை மரீஇய தொரால்" என ஆல் ஈறும், "காணன்மார் எமர்" என மாரீறும், 'அஞ்சாமை யஞ்சுவதொன்றின்'

என ஐகார வீருயும் வரும். இவற்றுள் அஞ்சாமை என்பது தொழிற்பெயர். மறையன்றே எனின் தொழிற் பெயர்மறையும் உண்டெனினும் அஞ்சுவென்............ ............ தொழிற்பெயர் வாய்ப்பாடும் ஒருவழி விலங் கோளாமாகலின் மறையும் அங்கிகர்த்ததாம் என்பது. மற்று உண்ணற்க, உண்ணேற்க, உண்ணுற்க என்ப வோ எனின் அவையப்பத்திடை வேறுபாடல்லது மூன் கூறிய ககரவீற்றவாக லொக்கும் (உஅ)

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா (229)

என் - எனின், இதற்கும் அக்கருத்தொக்கும்.

இ - ள்: பலரது படர்க்கையும் முன்னிலையும் தன் மையும் ஆகிய எஞ்சிய கிளவிக்கண் வரும் மூன்றும் நிகழும் காலத்து வரும் செய்யும் என்னும் முற்றுச் சொல்லொடு பொருந்தா என்றவாறு.

உ - ம்: ... ... ... ... ... (உகூ)

செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி. (230)

என் - எனின், இதுவும் மேலெஞ்சியகிளவி என்று ஓதிய பொதுவிதியுட்பட்ட வினையெச்சம் என்பதற்கு வாய்பாட்டு வேற்றுமையும் முடிபு வேற்றுமையும் கூறு வான் தொடங்கி, அவ்வினையெச்சங்களுள் சிறப்புடைய வாய்பாடுகளைத் தொகுத்துணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: செய்து என்பது முதலாகச் செயற்கு என்பது ஈருக ஓதப்பட்ட அக்கூற்று ஒன்பது வாய் பாட்டதாம் முன் வினையெஞ்சுகிளவி என்றேதப் பட்டது என்றவாறு.

அவற்றுள் செய்தென்பது முதலாகச் செய்தென என்பதீறாக அந்நான்கும் இறந்தகாலத்தவாகலான் முன்னே உடன் வைக்கப்பட்டன. அவற்றுள் செய் தென்பது பெருவழக்கிற்றாகலின் முன்வைக்கப்பட்டது. அவற்றுள் செய்தென என்பது பிறவினையும் கோட லானும் பின்வைக்கப்பட்டது. இனிச் செய்யியர் என்பது முதலாகச் செயற்கு என்பதீறாக ஐந்தும் எதிர்காலத்தவாகலானும் பிறவினையுங் கோடலுண்மை யானும் பிறவினையுங் கோடலுடைமை செய்தென வினையின் பின்னர் உடன்வைக்கப்பட்டன. அவ் வைந்தும் எதிர்காலத்தவேனும் செய்யியர் செய்யிய என்னும் இரண்டும் வாய்பாட்டு வேற்றுமையல்லது பொருள் வேற்றுமை யின்மையின் உடன்வைக்கப் பட்டன. செயின் என்பது வாய்பாட்டு வேற்றுமை யோடு பொருள் வேற்றுமை யுடைமையின் அவற்றின் பின்னர் வைக்கப்பட்டது. செய என்பது எதிர் காலத்ததே யன்றிப் பிறகாலத்துஞ் சிறுபான்மை வருதலான் அதன்பின் வைக்கப்பட்டது. செயற்கு என்பது அவைபோல வழக்குப்பயிற்சி யின்மை யின் எல்லாவற்றினும் பின்வைக்கப்பட்டது. இதன் முன் செய்தென்றோதிய வாய்பாடு குற்றியலுகரத்தால் ஆராயப்பட்ட கடதற என்னும் நான்கீறும் இகரவீறும் யகரவீறும் என அறுவகைப்பட்டது. அவ்வறுவகையுஞ் செய்தெனப் பொருண்மையால் ஒன்றாக வைக்கப் பட்டது.

அஃதேல் செய்யூ, செய்பு, செய்தென என்பனவும் இதனுள் அடங்காவோ எனின், அவ்வாறடங்குமேனும் இவற்றிற்கு வேறுபாடு உண்டென்று அறிவித்தற்கு வேறோதினர் என்பது. யாதோ வேற்றுமை எனின் செய்தென்றதன் ஈறு செய்தல் என்னும் தொழிற் கண்ணே செய்து எனத் தகரவுகர வீறாயும், உண்டல் என்னுந் தொழிற்கண்ணே உண்டு என டகரவுகர வீறாயும், தின்றல் என்னும் தொழிற்கண்ணே தின்று

என றகரவுகரவீறும், புகுதல் என்னும் தொழிற்கண்ணே புக்கு எனக் ககரவுகரவீறும், ஓடல் என்னும் தொழிற்கண்ணே ஓடி என இகரவீறும், தூவுதல் என்னும் தொழிற்கண்ணே தூய் என யகரவீறும் ஒரு தொழிற்கண்ணே வேறுபட வந்தவாறு. ஒருதொழிற் கண்ணே வேறுபட வாராமையுடைய அத்தொழில் எல்லாவற்றிலும் உழூஉ எ-ம்; உழுபு எ-ம்; உழுதேன் எ-ம் உண்ணூஉ எ-ம்; உண்குபு எ-ம் உண்டேன் எ-ம் தின்றேன் எ-ம்; புகூஉ, புகுபு; புக்கேன் எ-ம்; ஓடூஉ, ஓடுபு, ஓட்டேன் எ-ம்; தூஉ, தூபு, தூய் எ-ம் வேறு படாது வருதலுடைமையின் வேறுகூறினர் என்பது. செய்யூ என்பதற்குச் செய்யா என்பதூஉம் ஓர்வாய் பாடு. அதுவும் ஒன்றினமுடித்தல் என்பதனாற் கொள்ளப்படும். இதனை இறந்தகால விரைவுப்பொருட்டு என்பாரும் உளர்.

செய்து என்பதற்குச் செய்யாநின்று என்பதூஉம் ஓர் நிகழ்கால வாய்பாடு. அதுவும் ஒன்றினமுடித்தல் என்பதனாற் கொள்ளப்படும்.

இனிச் செய்யியர் என்பது மழை பெய்யியர் எழுந்தது என்பது. செய்யிய என்பது மழை பெய்யிய எழுந்தது என்பது. செயின் என்பது மழைபெய்யிற் குளம் நிறையும் என்பது. இதுநிகழின் இதுநிகழும் என்னுங் காரணப்பொருள்பற்றிவரும். இதற்கு மழைபெய்தாற் குளம் நிறையும் என ஆல் என்பதும் ஓர்வாய்பாடு. அதுவும் ஒன்றினமுடித்தல் என்பதனாற்கொள்க. 'நனவிற் புணர்ச்சிநடக்கலும். என உம்மீறாதலும் ஒன்று' இதுவும் ஒன்றின முடித்தல் என்பதனாற்கொள்க. மழை பெய்யுமேற்குளம் நிறையும்... ... ...'... என்பனவோ எனின் அவற்றையும் இதன் குறிப்பென்று கோடலும் ஒன்று. அன்றியும் இவ்வெச்சப் பொருள்படுவன சில இடைச்சொல்லென்று கோடல் ஒன்று. 'ஒன்றானும் தீச்சொல்' என்புழி ஆனேஎனின் அதுவும் அப்பால்ஓரிடைச்

சொல் என்றலும் ஒன்று. ஆயினும் என்னுஞ் சொல் ஆனும் என இடைக்குறைந்து நின்றது என்றலும் ஒன்று. 'நுணங்கிய கேள்வியரல்லால்' என்புழி அல்லால் என்பதோ எனின் அன்றி என்னுஞ் செய்தெனெச்சக் குறிப்பிற்கு அதுவுமோர் வாய்பாடு என்பது. அல்லவாயி னென்பது பொருளாக்கி இதன் குறிப்பு என்பாரும் உளர்.

இனிச் செய என்பது மழை பெய எழுந்தது என்பது. மழைபெய்யக் குளம் நிறைந்தது என இறந்த காலத்துக்கண்ணும் வரும். மழைபெய்யக் குளம்நிறைந் தது என நிகழ்காலத்துஞ் சிறுபான்மைவரும். இவ் வெச்சந்தான் ஒருவழி மழை பெயக் குளம் நிறைந்தது எனக் காரணப்பொருளாயும், குளம் நிறைய மழை பெய்ததெனக் காரியப்பொருளாயும், மழைபெய எழுந்த தென அதற் பொருட்டென்னும் பொருட்டாயும், மழை பெய்யச் சாத்தன் வந்தான் உடனிகழ்ச்சியாய் நிகழ்த் தற்கண் என இடப்பொருட்டாயும் பிறவாற்றாயும் வரும் என்பது.

இனி 'துன்னிப் பெரியவோதினுஞ் சிறிய வுணரா' என்புழிப் பெரிய சிறிய என்பன பெருமை, சிறுமைப் பண்படியாக வந்தமையின் இவ்வெச்சத்தின் குறிப்பு என்றலும் ஒன்று. இவ்வெச்சப்பொருள் உரிச்சொல் என்றலும் ஒன்று. இனிச்செவ்வன் தெரிகிற்பான் எ-ம், புதவதினியன்ற அணியன் எ-ம், புதுவது புனைந்த வெண்கை யாப்பு எ-ம், பொய்கைப்பூப் புதிதீன எ-ம், பெருங்கையற்ற பெண்புலம்பு எ-ம், சிறுநனி நீதுஞ்சி யேற்பினும் எ-ம், ஒல்லைக்கொண்டான் எ-ம். பிறவும் அகரவீறன்றிப் பிறவீறாய் வருவனவும் அவ்வாறே உரைக்கப்படும்.

இனிச்செயற்கு என்பது உணற்குவந்தான் என்பது. இஃது அதற்பொருட்டென்னும் பொருள்பற்றி வரும்.

இது உணல் என்னும் தொழிற்பெயர் நான்காமுருபு பேற்ற வாறன்றோ எனின் அதுவுமோர் வழக்குண்டு. பெயர்ப்பொருண்மை நோக்கியவழி அதுவாகவும், காலம் நோக்கியவழி வினையெச்சமாகவும் கொள்க. எற்றுக்கு என்பது இதன் குறிப்பு வாய்பாடாகக் கொள்க. (௩0)

பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே. (331)

என் - எனின், இதுவும் ஓர் வினையெச்ச மாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள் பின் என்பது முதலாக இடத்தென்பதீறாக ஓதப்பட்ட வத்தன்மைத்தான வாய்ப்பாட்டு முறைமை யினையுடைய காலத்தைக் குறித்த எல்லாச் சொல்லும் மேற்சொல்லிய ஒன்பதும் போல வினையெச்சத்துக்கு வாய்பாடாம் இயல்பினையுடைய என்றவாறு.

உ - ம்:— பின் "இளமையுந் தருவதோ இறந்த பின்னே" எனவரும்; முன் "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை" எனவரும். பின் என்பது பின்னரென்றும், பின்னை என்றும், முன் என்பது முன்னரென்றும் முன்னை என்றும் வரும். இனிப் பின் என்பதும் முன் என்பதும் ஒருவினையிடத்து வாராது பிற்கொண்டான், முற்கொண்டான் எனத்தாமேயும் வரும். கால் "வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால்" எனவரும். கடை "தொடர்கூரத்துவாமைவந்தக்கடை" எனவரும். வழி "படுசுடர் மாலையொடு பைதலேயுழப்பாளைக்குடி புறங்காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை விடுவழி விடுவழி விடுவழிச் சென்றாங்கவர் தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே" எனவரும். இடத்து "களையுனர்கை கொல்லுங் காழ்த்த விடத்து" எனவரும். இவை காலம் விளக்கினில்லாதுகுறிப்பாதலிற்போலுங்காலங்கண்ணிய

என்றது. இவையிற் குறிப்புப் போலாது ஓரோர் காலங்களைக் குறித்துக்கொள்ள நிற்கும் என்பது. விடுத்தக்கால் என்பது விடுத்து என இறந்தகாலக் குறிப்பாயிற்று. "வாரி வளங்குன்றியக்கால்" என்பது குன்றின் என எதிர்காலக்குறிப்பாயிற்று.

மூன் செய்து, செய்யூ என்ற வாய்பாடுதம்மையே ஓதினவாறுபோலன்றி ஈண்டு அன், ஆள், அர், ஆர் என்றாற்போல அவற்றை ஈறு பற்றி ஓதினர் எனக் கொள்க. மற்று இக்காட்டிய உதாரணங்களெல்லாம் பெயரெச்சமும் பெயருமாகற்பால எனின், அவற்றின் பொருள் நோக்குஞ் சொல்நிலையுஞ் சந்திநிலைமையும் அன்னவன்மையின் இவ்வாறு வருவனவற்றை வினையெச்ச மென்கின்றாற்போலும் ஆயினும் இவை செய்த செய்யாநின்ற செய்யும் என்னும் பெயரெச்சங்களும் இவற்றின் மறைகளும் இவற்றின் தொகையாகிய வாய்பாடும் போலும் வாய்பாடுகளை யடைந்தல்லது வாராதென்பது.

என்ன கிளவியும் என்றதனால் பான், பாக்கு, வான், வாக்கு எனவும் பிறவாறும் வருவன கொள்க.

உ - ம்: உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான், கொள்வான்வந்தான், கொள்வாக்கு வந்தான் எனவரும். பிறவுமன்ன. ஆக வினையெச்சவாய்பாடு எழுத்தோத்து வகையான் பதினைந்தும், தந்திரவுத்தி வகையானும் இலேசானும் நோக்கப் பலவகையாயும் முடிந்தது. இலேசு என்பது.... ... .... ... .... ... யந்து கூறல். குறிப்பான் வெளிப்படுப்பது. (கூக)

அவற்றுள்,

முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின. (232)

என் - எனின், அக்கூறப்பட்ட எச்சங்களுள் முதற்கணின்ற மூன்றற்கும் முடிபுகூறுதல் நுதலிற்று.

இ - ள்: மேற்கூறப்பட்ட வினையெச்சவாய்பாடுகளுள் முதற்கண் எடுத்தோதப்பட்ட செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் அவ்வெச்சவினையை நிகழ்த்தின கருத்தாவினது வினையினை யுணர்த்துஞ் சொல்வினையே பின்பு முடிபாகக் கொண்டு முடியும் என்றவாறு.

உ - ம்: உண்டுவந்தான், உண்ணூஉ வந்தான், உண்குபு வந்தான் எனவரும். செய்தெனெச்சத்தின் குறிப்பாகிய இன்றி, அன்றி யென்பனவும் 'தம்மின் றமையா நந்நயந்தருளி' எனவும் 'தொல்லெழில்வரைத் தன்றி வயவுநோய் நலிதலின்' எனவும் வினைமுதல் வினையாய் முடிந்தவாறு கண்டுகொள்க. (௩௨)

அம்முக் கிளவி சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர் (233)

என் - னின், இதுவும் அம் மூன்றன் திறத்துப் படுவதோர் அம்முடிபு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: அம் மூன்று சொல்லும் சினைப்பொருளிடத்து வினையெச்சமாய்த் தோன்றின் முன் கூறின விதிக்கேற்ப வினைமுதலாகச் சினைவினையான் முடியாதுச் சினைமுதல் வினையோடுஒன்றாய்முடியினும் பிறவாற்றான் முடியினும் முன் கூறிய வினையோடு ஒன்றாதற் றன்மையை உடைய என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

உ - ம்: கையிற்று வீழ்ந்தான், கையிறாஉ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் எனவரும். மற்றிது கையிற்று வீழ்ந்தான் என செயவென் னெச்சத் திரிபாகற்பாற்றெனின், அவ்வாறாவது இறுதற்றொழில் கையதும் வீழ்தற்றொழில் முதலதுமாயின் அன்றே;

18. * * *

"செப்புமிதன் பொருளிரண்டாம்" என்பது இந்தச் சுத்த சைவத்திலெடுத்த வேதாந்தத்திற் பொருள் இத்துணை எனக் கூறுமுகத்தால் ஜகத் சிருஷ்டிக் கிரமத்தைத் தொகுத்துக் கூறுகின்றது. ஈண்டு முதற்கட் சித்தென்றது சிவத்தை. அந்தச் சிவமான பராத்பரத்தில் உண்டானது பராசக்தி. அதனைத்தான் ஈண்டுச் சத்தி என்றது. அது கிரியாதி சத்திகட்கு மூலமாகலிற் பரை எனப்படும். அது ஞானசித்தியில்,

परात्परात्परोत्पन्ना पराशक्तिस्तदुद्भवा।
इच्छाज्ञानक्रियाशक्तिस्तत्पराशक्तिरुद्भवा॥

என வருமாற்றான் உணர்க. மற்றது மேல் விளங்கும். 18

19. * * *

"பரமசிவ சத்திகள்பாற் பஞ்சமூர்த்தம்" என்பது உலகுண்டாமாறு தத்துவவுற்பத்திக் கிரமத்தால் விளங்கக் கூறுகின்றது. அது பரிபூரணசித்தியில்,

"அங்கியிற் பொறியு மப்பிற் புற்புத மதுவு மங்கி
வெங்கதிர் தன்னிற் றோன்றி விரிந்துள முகிலும் போலப்
பொங்கிய சிவத்திற் சத்தி மாயைபுத் தேளிர் பூத
மங்கிய றத்து வங்க ளாமிவை யெங்ங னென்னில்."

"தெரிவரிய சிவத்தபினை பின்னையெனுஞ் சிற்சத்தி
மாயைமுதற் சிறந்து தோன்றிப்
பரிவரிய சத்திகள்பாற் பஞ்ச(மூர்த்தி களொ)ன்றி
லொன்றாகிப் பரிண மித்துப்
பொருவரிய மூர்த்திகள்பாற் சத்தமாதி புகன்றவடை
வேயைந்தும் பொருந்தித் தோன்றிக்
கருவுறுமா பூதங்க ளாகிப்பஞ் சீகரித்
துலகு சராசர மா... .... ..."

எனவும், பிறவும் வருமாற்றான் உணர்க. இனிச் சிவ சத்தியினின்று மாயை உண்டாமென்றது. ஞானசித்தியில்,

ज्ञानेच्छास्वक्रियामध्ये शिवशक्तिसदाशिवम् ।

எனவும், பிறவும் சுத்தமாயா தத்துவங்கட்குச் சிவ ஞானாதி சத்தியிற் றோற்றங் கூறுதலின். இனி இந்தச் சுத்த மாயையிலே அசுத்த மாயை தோன்றுமென்பதற்கு அதிலேயே,

बिन्दुशक्त्युद्भवा माया मोहिनी मोहकारणम् ।

என வருமாற்றான் உணர்க. இவ்வாறு திருமந்திரத்திலும்,

"தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே கடன்மலை யாதியு மாய்நிற்குந்
தானே யுலகிற் றலைவியு மாமே." (412)

என்பதனாலும்,

यामामनन्ति मुनयः प्रकृतिं पुराणीम् ।

என்பதுபற்றிச் சத்தியியல்பு கூறுமாற்றானும்,

"விளையும் பரவிந்துத் தானே வியாபி
விளையுந் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேத
மளவொன்றி லாவண்ட கோடிக ளாமே." (1813)

என அசுத்த மாயைக்கு மூலம் மகாமாயை என வருமாற்றானுமுணர்க. இனி பரமசிவ சத்திகள்பாற் பஞ்சமூர்த்தம் பகுந்தொன்றி லொன்றாகப் பரிணமித்த தென்பதற்கு வருமாறு:— திருமந்திரத்தில்,

"மங்கையு மாரனுந் தம்மொடு கூடிநின்
றங்குலி கூட்டி யகம்புறம் பார்த்தனர்
கொங்கைநல் லாளுங் குமரர்க ளிவருந்
தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே." (1191)

என வருமாற்றானுணர்க. அங்ஙனம் ஞானசித்தியில்,

इच्छाज्ञान क्रियाशक्तिस्तत्पराशक्ति रुद्भवम् ।
ज्ञानेच्छा स्वक्रियामध्ये शिवशक्ति सदाशिवम् ॥
नादबिन्दुविभेदोक्त षट्तत्त्वं तत्प्रकाशितम् ।
सदाशिवान्महेशस्य मध्ये रुद्रोद्भवं तथा ॥
रुद्रोत्पत्तिर्यथा (विष्णु,) स्तथा उत्पन्न आत्मभूः ।
सृष्टिकाल विधानोक्तं सर्वतत्त्व प्रकाशितम् ॥
ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ।
बिन्दुनाद द्विधा शक्ति......पर परात्परम् ॥

என வருமாற்றானுமுணர்க. ஈண்டு பரத்திற்றோன்றிய பரைவழி யுற்பவ மொன்பது மூர்த்திகள் கூறியிருக்க அஞ்சு மூர்த்தங்க ளென்றது, சிவம் சத்தி நாத விந்து வான நான்கும் பரநாத பரவிந்துவாயடங்கி அவ்விரண் டின் சாமியமே சாதாக்கியமாகலின் அதனுள் அடக்கிச் சுத்த சைவத்திற் சதாசிவாதி பஞ்சமூர்த்திகளென்ற தென்க. அவ்வாறு கூறியது அதிலேயே,

सृष्ट्यादि पञ्चकृत्यर्थं ब्रह्मादिदेवसम्भवम् ।

என்பதனானும் உணர்க. இனி அந்தச் சதாசிவாதி ஐந்து மூர்த்திகளினின்றுஞ் சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரையுந் தோன்றுமென்றது இந்தச் சுத்த சைவத்திலேயன்றி மாயாவாதத்திலு மில்லை. அது,

आत्मनः खं ततो वायुर्वायोरग्निस्ततो जलम् ।

என்றற் ரொடக்கத்தாற் பிரமத்திலாதிக்கண் ஆகாயம் தோன்றி அதிலே மற்றனைத்துந் தோன்றுமென்றலின். அந்தசத்தாதி தந்மாத்திரைகளில் ஆகாசாதி தோன்று மென்றது சித்தாந்தம் சாங்கிய மற்றுங்கூறியவாறும். பஞ்சீகரணமாமாறு முன்னர் வேதாந்தி மதத்திற் கூறியவாறுதானே. அது.

पञ्चानामपि भूतानां द्विधा कृत्वा पृथक् पृथक् ।
तत्र यत्पञ्चधैकांशं प्रत्येकं तच्चतुर्विधम् ॥
पुनः कृत्वा विना स्वांशं चतुर्ष्वन्येषु योजनम् ।
तथा चांशसमाधिक्यात् तत्त (दाख्या) व्यवस्थितिः ॥
इत्येवं पञ्चभूतोत्थं शरीर भुवनादिकम् ।

என வருமாற்றான் உணர்க. இவ்வாறே பரிபூரண சித்தியிலும்,

“இத்திறஞ் சூக்கும பூத மிசையப்பஞ் சீகரித்த
வத்திற முரைக்கி லாதி நாயகன் றிருமுன் பைந்து
மத்ததா .........”

என்றற் ரொடக்கத்தால் உணர்க. இனி “மண்முதனாற் பூதத்தரு மனமூன்றுன்கு தோன்றும்” என்றது பரி பூரணசித்தியில் தேவபூத கரண வேறின்மை கூறியவழி,

ஐயமன மேபூமி தன்னின் கூறாய் அத்தெய்வம்
சந்திரனே யாகக் கொண்டு
பொய்யு மெய்யு நிச்ச(யி)க்கும் புத்தி நீரின்
பொருந்திய கூறாய்த்
தெய்வம் ெ ணயாக த்தீய யவகங் காரம
பிமானம் பண்ணுந் தெய்(வ)முருத் திரனாகத்
தீயின் கூறு
யுய்யவரு காலின்கூ றாகிச் சித்த முட்கொண்டு
சலிக்குமிதற் குணர்வே தெய்வம்.

எனக் கூறுமாற்றான் உணர்க. இவ்வாறன்றி வரும் மாயாவாதத்தில் அது,

तन्मात्रपञ्चकाज्जात मन्तःकरणपञ्चकम् ।
मनो बुद्धिरहङ्कारश्चित्तं ज्ञातृत्वमित्यपि ॥
पार्थिवः स्यादहङ्कारो ज्ञातृत्वमथकारात्मकम् ।
करणद्वयमेतत्तु कर्तृत्वे........... ॥
बुद्धिः स्यात्तेजसश्चित्तं......आप्यं मनः ।

என்னும் சர்வசித்தாந்த சங்கிரக வசனத்தால் உணர்க. ஆகாசாதி ஐம்பூதத்தினும் பத்து இந்திரியமும் பதினான்கு தெய்வமுமா மென்றது முற்கூறிய அந்தக்கரண தெய்வம் நான்கும் கூட்டி என்க. அது வருமாறு. பரிபூரணசித்தியில் தேவ பூத கரண வேறின்மை கூறிய வழி.

சோத்திரேந் திரிய மாகா சத்தினிற் றோன்றி நின்றிட்
டார்த்திடுஞ் சத்தந் தன்னை யறிந்திடு மணங்கு திக்க(ா)ங்
கோத்தவச் சத்தந் துத்தங் குரலிழை விளரி தாரம்
எத்தரு மிளியி னோடு கைக்கிளை யிவையே ழென்ப.

தோலது காலின் கூறாய்ச் சொ(ல்லண)ங் கனிலமாத்தன்
பாலுறு பரிசந் தன்னை யறிந்திடும் பரிச மாவ
கோலியொன் றுலொடித்தல் குளிருதல் கொதித்தலன்பாற்
சாலவே யிருவர் தம்மாற் றழுவுத லென்ப தக்கோர்.

கண்ணெனுங் கருவி யங்கிக் கூறதாய்க் கலந்து நின்றே
யெண்ணுறு முருவங் காணு மின்னதி தெய்வமாக
நண்ணுமவ்வுருவம் பொன்மை நலந்திகழ் வெண்மை செம்மை
(த)ண்ணிய கருமை தூமந் தானெனப் பகர்வர் தக்கோர்.

நாவெனுங் கருவி நீரின் கூறதாய் நண்ணி நின்றே
மாவிர தங்க டேரும் வருணனே தெய்வ மாகக்
காமுறு மிரதங் கைப்புப் புளிப்பு(க் கார்ப்) புத்துவர்ப்புத்
தாமிவை யுடனு வர்ப்பு த்தி(த்திப்)பென் றுற தாமே.

மூக்கெனுங் கருவி பூமிக் கூறதாய் முகந்து கந்தந்
தாக்கவே யசுவி தெய்வந் தானுமத் தாணி யாகத்
தூக்கியே பார்க்கிற் கெந்தந் துற்கந்த சுகந்த மாகும்
பாக்கிய வான்கட் கெல்லாம் பரமமாய் நிகழு மன்றே.

வாக்குவான் கூற தாகி வசனிக்கும் வாயுக் கூறாய்ப்
போக்கினைச் செய்யும் பாதம் புகலங்கிப் பொருந்திப் பாணி
பாக்கிய தானஞ் செய்யும் பாயுரு வுபத்த மண்ணீர்
ஆக்கிய கூற தாகு மதன்றொழில் விசர்க்கா னந்தம்.

வாக்கின் றெய்வ மனலாகு மலிந்த பாணிக் கிந்திரனும்
போக்கு வரலும் பதத்திற்குப் பொருவிறிருவிக்கிர மன்மல
நீக்கஞ் செய்யும் பாயுவிற்கு நினைப் ...... யறு மிருத்தென்பர்
ஆக்கஞ் செய்யு முபத்தத்திற் கதிதே வதைதா னயனும்.

என வருமாற்றான் உணர்க. அந்தக் கரண நான்கிற்கும் தேவ பூத கரண வேறின்மை கூறியது முதற்காட்டினும். இவ்வாறு தேவதை யொத்தாலுந் தத்துவத் தோற்றம் வேறுபடவரும்; மாயாவாதத்தில்.

அது சத்தாதி பஞ்சதந்மாத்திரைகளாகிய சூக்கும பூதங்கள் வியாபகாதி குணபேதத்தால் மூவகைப்பட்டு ஞானேந்திரியாதிகளைத் தோற்றுமென்றலின். அது பார்க்கரீய பக்ஷத்திற் பரிணாமவாதங் கூறுமாறே,

सत्त्वरजस्तमो भेदाद्भूतान्यत्र त्रिधा पुनः ।
जातानि सत्त्वभूतेभ्यः पञ्चज्ञानेन्द्रियाणि च ॥
श्रोत्रं त्वक् चक्षुषी जिह्वा घ्राणमित्यथ पञ्च च ।
दिग्वाय्वर्के जला(ध्यक्षाश्वि) नस्तत्राधिदेवताः ॥
मनो बुद्धिरहङ्कारश्चित्तं चेति चतुष्टयम् ।
भूतेभ्यः सात्विकेभ्योऽभूत् क्रमात्तत्राधिदेवताः ॥
चन्द्रो विष्णुश्चतुर्मुखः शङ्करश्चेति निश्चिताः ।
राजसेभ्यस्तु भूतेभ्यो भवेद्वागादिपञ्चकम् ॥

वाक्पाणिपादसंज्ञानि पायूपस्थौ तु देवताः ।
अग्नीन्द्रोपेन्द्रमृत्युश्च क्रमादेव प्रजापतिः ॥
एतेभ्यश्चैव भूतेभ्यः प्राणाद्याः पञ्च वायवः ।
प्राणोऽपानस्तथा व्यान उदानश्च समानकः ॥
पञ्चीकृतानि भूतानि तमोभूतोद्भवानि वै ।

எனக் கூறியவாறே காண்க.

पुनश्च कुत्रचिच्छ्रोत्रादि चतुर्दश करणानामधिप तयः ।
दिक्वातार्कप्रचेता........न्द्रोपेन्द्रमृत्सुकाः ॥
तथा चन्द्रश्चतुर्वक्त्रो रुद्रः क्षेत्रज्ञ ईश्वरः ।

எனவும் சொல்லப்படுகிறது. இவ்வாற்றாற் றெய்வ மொவ்வாமையுங் கண்டுபொருந்துமாறுமுய்த்துணர்ந்து கொள்க. 19

20. * * *

'முன்னான்கிற்கும்' என்பது முற்கூரிய பதினன்கு தத்துவத்திற்கும் பஞ்சபூதங்கட்கும் அதிதேவதைக ளிவர்களென்று கூறுமுகத்தான் மேலுந்தத்துவங்கள் விரியும் என்கின்றது - ஈண்டு புத்திக்கதி தேவதை பிரகற்பதி என்றது ஒவ்வாதது,

चन्द्रो विष्णुश्चतुर्मुखः शङ्करश्चेति निश्चिताः ।

என்ற வசநத்தால் ஒக்கினும் ஒக்கும் என்றது.

तथा चन्द्रश्चतुर्वक्त्रः रुद्रः क्षेत्रज्ञ ईश्वरः ।

என்னும் வசனத்தால் பிரகற்பதி பிரம்மாவாகலின் ஈண்டு,

ईश्वरः इत्यत्र क्षेत्रज्ञश्चासावीश्वरश्चेति क्षेत्रज्ञसविशेषण
ईश्वरः इति कृत्वा समाधेयम्

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



158

அன்றி இவ்வசநம் அந்தக்கரண பஞ்சக பக்கத்தில் தேஜசு என்னும் உளத்திற்கீசுவரனெனக் கூறியு தெனினுங் கொள்க.

அசுவினீ தேவதை என்பதெங்கும் ஒக்கும். பூமி என்று பாடமோதிப் பூமிதேவியைக் கொள்ளினெவ் வாதாம். தத்துவத்திற்கு திருவிக்கிரம் என்றது உபேந் திரன் என்னும் விண்டுவாகலி னெக்கும் பாயுதத்துவத் திற்கு மிருத்தியு வென்றது,

दिग्वातार्कप्रचेता न्द्रो (न्द्रो) (त्रो) पेन्द्रमृत्युकाः।

என்னும் வசநத்திற்கு ஒக்கும். ஈண்டு மிருத்தியுகா என்புழி 'க' என்றது பிரம்மா பிரசாபதியாகலின், எங்கும் ஒக்கும், செ.... மித்திரனோடு பிரஜாபதியுமாகும். எனவும் நீக்கஞ் செய்யும் பாயுவிற்கு நினையிற்றெய்வ மித்திரனும் எனவும் பாடமாயின்.

अग्नीन्द्रोपेन्द्रमित्राश्च क्रमादेव प्रजापतिः।

என்னும் வசநத்திற் கொக்கும். ஈண்டு மித்திரன் என்றது சூரியனை. மிருத்யுகா என்ற வசநத்திற் கொவ் வாதாம். மிருத்யு என்றது யமனை. பிறவாறும் உளவேற் காண்க. இனி "யைம் பூதத்தின் வளர் தெய்வ மயன் முதலாம் ஐவ" ரென்றது.

पृथिव्यप्तेजसो वायुराकाशं भूतपञ्चकम्।
ब्रह्मा विष्णुस्ततो रुद्रमीशमीशानकारणम्॥

என்னும் ஞானசித்திவசநத்தால் உணர்க. இப்பூதங்க ளொன்றிலொன்றுற்பவமாமாறு ஞானசித்தியில்,

शब्दादि पञ्चतन्मात्रे आकाशादि समुद्भवम्।
आकाशाद्वायुरुत्पन्नं वायव्ये दहनोद्भवम्॥
दहने जलमुत्पन्नं जले मेदिनिरुद्भवम्।

என்பதனால் உணர்க. இனித்தத்துவந்தொண்ணூற்றாறு மேல் விளங்கும்.

தருமபுர ஆதீன வெளியீடு.

# திருக்குறள் - உரைவளம்

## பொருட்பால்

அறத்துப்பாலைப் போலவே உரைப்பகுதி, உரை விளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, இவைகள அடங்கியன.

சிறப்பாகத் தொகுப்புரை, மூதுமொழிவெண்பாக்கள், பழமொழிப்பகுதிகள், குறிப்புரை ஆகிய இவைகளும் இப்பதிப்பில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

M. O. மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

செயலாளர்,
ஞானசம்பந்தம் காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சாவூர் ஜில்லா.

## தருமபுரத்தில் ஏகதின லக்ஷார்ச்சனை.

7—2—52 குருவாரத்தன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆக்ஞைப்படி தருமபுர ஆதீனத்தில் கோயில் கொண்டுவிளங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகைக்கும் லக்ஷார்ச்சனை நடைபெற்றது. காலை $5\frac{3}{4}$க்கு அர்ச்சனை தொடங்கியது. ஞானபுரீஸ்வரருக்குப் பதின்மர் ஸகஸ்ரநாமங்களைச் சொல்ல, பதின்மர் பஞ்சவில்வங்களால் அருச்சனை செய்தார்கள். ஞானாம்பிகைக்கு நவசக்தியர்ச்சனை என்ற முறையில் ஒன்பதின்மர் வாசிக்க, ஒன்பதின்மர் அருச்சனை செய்தார்கள். நடுப்பகல் $1\frac{1}{2}$ மணி வரையில் நடந்தது. ஆராதனைகளும் நைவேத்தியங்களும் எல்லாம் தனித்தனியே. உச்சிக்காலத்தில் விசேஷ அபிஷேகம். மாலை ஐந்துமணிக்கு மீண்டும் அருச்சனை தொடங்கியது இரவு ஒன்பதுமணிக்கெல்லாப் லக்ஷார்ச்சனை பூர்த்தியாயிற்று. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் காலை முதல் முடியும் வரை எழுந்தருளியாகிவழிபாடுசெய்து அனைவர்க்கும் அருட்பிரஸாதம் வழங்கினார்கள். மாயூரம் முதலிய வெளியூர் அன்பர்கள் பலரும் வந்து தரிசித்து ஆசி பெற்றார்கள். ஆதீனப்பாடசாலை மாணவர்கள் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினார்கள்.

## குத்தகை விளம்பரம்

தஞ்சாவூர் ஜில்லா மாயூரம் தாலுகா தருமபுர ஆதீன மடத்துக்குச்சொந்தமான அடியில்கண்ட கிராமங்களிலுள்ள நஞ்சை, புஞ்சை வகையறா பலவிருக்ஷங்கள் உள்பட 1952ஹ பிப்ரவரிமீ 13உ புதன்கிழமை பகல் 3 மணிக்கு மாயூரம்தாலுகா தருமபுரத்தில் ஆதீனம் கச்சேரியில் குத்தகைக்கு ஏலத்தில் விடப்படும். குத்தகை அபேக்ஷிப்பவர்கள் அன்று ஆஜராகி ஏல நிபந்தனைகட்குட்பட்டு ஏலம் கேட்கலாம்.

### சொத்து விபரம்

பிரஞ்சுஇலாகா காரைக்கால் பிராந்தியம்,

| | நஞ்சை | | | புஞ்சை | | |
|---|---|---|---|---|---|---|
| | எக்தார் | ஆர் | சாந்தியார் | எக்தார் | ஆர் | சாந்தியார் |
| 1. பொன்பேத்தி | 96 | 52 | 24 | 1 | 4 | 90 |
| 2. செடுங்காடு | 0 | 51 | 85 | 0 | 32 | 40 |
| 3. மேலகாசாகுடி | 39 | 44 | 21 | 0 | 33 | 99 |
| ஷை | 2 | 36 | 40 | 0 | 9 | 20 |
| 4. திருநள்ளாறு மடம்மானியம் | 2 | 2 | 16 | மடத்து தோட்டம் பல விருட்சங்கள் உள்பட | | |

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆக்ஞைப்படி,

தருமபுர ஆதீனம், 25—1—52.

K. S. Ramaiya, B. A., B. L.
மானேஜர்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—2—1952.